Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-30 13-06-2005 திங்கட்கிழமை ஓசை 115



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12120)

## பேரினவாத பிக்குகளின் செயற்பாடுகளை கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் இனவாதக் கொள்கையில் இருக்கும் பிக்குமாரின் செயற்பாட்டைக் கண்டிக்கும் வகையில் யாழ்.பல் கலைக் கழக மாணவர்கள் முதற்கட்டமாக இன்று எதிர்ப்பு போராட் டம் ஒன்றில் ஈடுபடவுள்ளனர்.

சிங்கள தேசம் தமிழர்களுக்கு எந்தவிதமான சலுகை களையோ, உரிமைகளையோ கொடுக்க முன்வர மறுக்கின்றது. அதையும் மீறி சில சந்தர்ப்பங்களில் உரிமைகள் தர முற்படு கின்ற போது அரசியல் கட்சிகளும் மதவெறி பிடித்த பிக்குகளும் எதிர்ப்பைத் தெரிவித்து அதனைத் தடுப்பது வரலாற்று வழி வந்த உண்மை.இதனைக் கண்டித்து யாழ்.பல்கலைக் கழகத் திலிருந்து ஆரம்பமாகும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பேரினவாதக் கொள்கை அடைக்கப்பட்ட பெட்டி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு பரமேஸ்வராச் சந்தியில் தீயிட்டு அழிக்கப்பட வுள்ளது. இந்தப் போராட் டத்தில் யாழ்.பல்கலைக்கழக விரி வுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கும் கலந்து கொள்ளஅழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்த ஜே.வி.பி. ஏற்பாடு!

### சனாதிபதி பணியாவிட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறப்போவதாகவும் மீண்டும் உறுதியாக அறிவிப்பு

(கொழும்பு)

**பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கொழும்பில் நாளை பெரும் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாக ஜே.வி.பி. நேற்று அறிவித்துள் ளது. பெரும் மக்கள் வெள்ளத்தைத் திரட்டி இப்போராட்டத்தை நடத்தப்போவதாகவும், நாளை மறுதினம் நள்ளிரவுக்கு முன்னர் பொதுக் கட்டமைப்பைக் கைவிட்டுவிட்டதாக அறிவிக்க சனாதிபதி தவறினால் தாம் அரசாங்கத்திலிருந்து வெளியேறப்போவது உறுதி எனவும் ஜே.வி.பி. மீண்டும் தெரிவித்துள்ளது.**

புத்தளத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பின ரும், பாராளுமன்ற உறுப்பினருமான வீரக்குமார திஸாநாயக்க; உயிர்த் தியாகங்களுக்கு மத்தியில் மக்களின் ஆணையுடன் அமைக்கப்பட்ட இந்த அரசாங்கத்தின் தலைவி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சேவகம் செய்யப் புறப்பட்டுள்ளமை இந்த நாட் டிற்கு செய்துள்ள துரோகமாகும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா- ரணில் இன்று சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு வார்த்தை ஒன்றை நடத்துவதற் காக சனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இவர்களுக்கிடை யிலான பேச்சு வார்த்தைகள் இன்று சனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## கருணாவின் சதிமுறியடிப்பு சமரில் எட்டுப் போராளிகள் வீரச்சாவு

11.04.2004 அன்று தேசத்துரோகி கருணாவின் சதி முறியடிப்பு சமரில் எட்டுப் போராளிகள் வீரச்சாவடைந்துள் ளனர்.

வீரவேங்கை- தேன்முகில் (தங்க வேல் - வசந்தகுமாரி/தேவி, கித்துள் வேவா கரடியனாறு, மட்டக்களப்பு.)

வீரவேங்கை -தோகையொழி (இராசநாயகம் - இந்துமதி, தும்மங் கேணி, திக்கோடை, மட்டக்களப்பு.)

வீரவேங்கை - சிவாசி (பாலசுந் தரம் - தேவகி, 9ஆம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

வீரவேங்கை -தாரணி (இராசதுரை -ரதி, கரடியனாறு கொலனி உன் னிச்சை வீதி, மட்டக்களப்பு)

வீரவேங்கை - செவ்விழி (பால சிங்கம் - மோகனா, கடற்கரை வீதி, பால்ச்சேனை, அம்பாறை)

வீரவேங்கை - கதிரொளி (தர்ம லிங்கம் - வனிதா, முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

வீரவேங்கை - கதிரமுது (கதிர் காமத்தம்பி - அம்பிகாவதி/அம்பிகா, பெரியபுல்லுமலை, உறுகாமம், மட்டக்களப்பு)

வீரவேங்கை - கங்கை/இன்பரூபா (வீரசிங்கம் - சிறிதேவி, இலுப்படிச் சேனை, கன்னங்குடா, மட்டக்களப்பு)

(12ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில்

## நெருக்கடிகள் குறித்து சனாதிபதி சந்திரிகா கூட்டமைப்பினருடனான சந்திப்பில் விபரிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை உருவாக்கு வது தொடர்பில் தற்போது எழுந் துள்ள நெருக்கடி குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ருடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து கூட் டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிக்கையில்; சுனாமி கட்ட மைப்பு சம்பந்தமாக தற்போது நாட் டில் எழுந்துள்ள பல்வேறு பிரச் சினைகள் பற்றி சனாதிபதி எங்களுக்கு விளக்கிக் கூறிய அதே வேளை, இந்தச் சுனாமி கட்ட மைப்பை விரைவில் ஏற்படுத்து வதற்கு தான் உறுதியாக உள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை உப்பாறில் வைத்து பொலிஸ் கான்ஸ்டபிள் புலிகளால் கைது

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான உப்பாற்றினூடாக பயணம் செய்த சிறிலங்கா பொலிஸ் கான்ஸ்டபிள் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இக்கைது தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கூறுகையில்; தங்களது கட்டுப்பாட்டுப் பகுதியான உப்பாற்றினூடாகப் பயணம் செய்தபோதே இவரைக் கைது செய்ததாகவும் சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் இவர் மீதான விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (25)

## திருமலை தோப்பூர் பள்ளிவாசலில் எழிலன் - முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

(திருகோணமலை)

மூதூர் - தோப்பூர் பள்ளிவாசலில் நேற்று காலை விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலனுக்கும், முஸ்லிம் மதப் பெரியார்கள் மற்றும் உள்ளூர் தலைவர்களுக்கும் இடையே மூன்று மணி நேரக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அப்பிரதேசத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களின் உறவு இறுக்கமாகப் பேணப்பட வேண்டும் என்றும் அச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சுமார் 300பேர் வரை கலந்துரையாடலில் பங்குபற்றினர். அப்பிரதேசத்தில் நெற் செய்கையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம்; தமிழகத்தில் எதிர்ப்புப் போராட்ட முஸ்தீபு!

இந்திய-சிறிலங்கா இராணுவ ஒப்பந்தத்திற்கு தமிழ் நாட்டில் கடும் எதிர்ப்பு உருவாகியுள்ளது. இந்த இராணுவ ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டத்தை நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் சென்னையில் வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது குறித்து விடுதலைச் சிறுத்தைகள் இயக்கப் பொதுச்செயலாளர் தொல் திருமாவளவன் வெளியிட் டுள்ள அறிக்கையில், தமிழினத்திற்கு எதிராக சிறிலங்கா அரசோடு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய இந்திய அரசு முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத் தகைய முயற்சியைக் கைவிட வேண்டும் என்று இந்திய அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இது குறித்து தமிழகத்தில் தமிழ் தேசிய அமைப் புக்களை கலந்து பேசி தமிழக மக்கள் சார்பில் எதிர்ப் பைத் தெரிவிக்க வரும் 15ஆம் திகதி சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என்றார்

# கனேடிய தமிழ் மாணவர் அமைப்பினரின்

# மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள்

கனேடிய தமிழ் மாணவர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர் எழுச்சி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை ரொரன்ரோவில் உள்ள சீதப்பிரே உயிர்நிலைப் பாடசாலையில் நடைபெற்றுள்ளது. இதன்போது நூற்றுக் கணக்கான மாணவர்களும், மக்களும் கலந்து கொண்டனர்.

நண்பகல் 12.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை ஓவிய மற்றும வரலாற்று ஆவணக் கண்காட்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு எழுச்சிக் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழீழ தேசியக் கொடியினை மாவீரர் யூசி அவர்களின் சகோதரி ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து கனேடிய தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

மாவீரர் பொன்.சிவகுமாரன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மலர்வணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழீழத்தின் புகழ் பூத்த இசையமைப்பாளர் வர்ண. ராமேஸ்வரன் அவர்களின் இசையில் கனேடிய இளைய தமிழ்க் கலைஞர்களினால் உருவாக்கப்பட்ட "வேர்களைத் தேடி" என்ற பாடல் இறுவட்டு இந்நிகழ்வின் போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதனை கனேடிய இளையோர் அமைப்பின் பொறுப்பாளர் சதா வெளியிட்டு வைக்க, தியாகி லெப்.கேணல் திலீபன் அவர்களின் சகோதரர் அசோகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## மன்னார் பெரியபாலம் புனரமைக்க முடிவு

(மன்னார்)

மன்னார் சங்கிலிப்பாலம்என அழைக்கப்படும் பெரிய பாலத்தை ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பிறஜ ஒப் ஏசியன் குழுவினர் நேற்று முன்தினம் பார்வையிட்டுள்ளனர்.

இவர்களுடன் மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்குலசேகரம் ஜொய்ஸ் குரூஸ் அவர்களும் சமுகமளித்தார். இதனைத்தொடர்ந்து மேற்படி பாலத்தை புதிதாக நிர்மாணித்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று அவர்களது அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது. இப்பாலத்தை புனரமைக்க ஜபிக் எனும் ஜப்பான் நாட்டு தொண்டு நிறுவனம் 450 மில்லியன் ரூபாவை செலவிட முன்வந்துள்ளது.


## தவறிவிட்டது

ஒட்டுசுட்டானுக்கும், புதுக்குடியிருப்பிற்கும் இடைப்பட்ட பகுதியில் எனது கைத் தொலைபேசி தவறிவிட்டது. இத் தொலைபேசியில் பாவிக்கப்படும் சிம்காட் முக்கிய தேவை யாக உள்ளது. எனவே இக் கைத் தொலைபேசியைக் கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைத்து உதவும்படி கேட்டுக்கொள்வதுடன் இதற்கான சன்மானமும் வழங்கப்படும்.

தகவல்:- க.பத்மராஜா

(5936)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்...

மலர்வு 26 - 05 - 1955

உதிர்வு 28 - 05 - 2001



திரு.ஆதிசர்வராஜா-கோகுலராஜா

(லங்கா சீமெந்து லிமிற்றெட் K.K.S)

திதி:-13.06.2005

ஆண்டுகள் நான்கு
சென்றதய்யா!
எம்மைத்தவிக்க விட்டு விட்டு
கொடிய காலன் உம் உயிரை
பறித்தானே
நீங்கள் மறைந்தாலும் உங்கள்
நினைவுகளை என்றும்
சுமந்தபடி...

தகவல்:-மனைவி,
பிள்ளைகள்,உற்றார்,
உறவினர்.

(6259)

## தவறிவிட்டது

கறுக்காய் குளத்திற்கும், கந்தபுரத்திற்கும் இடையில் எனது உந்துருளி ஆவணங்கள், பயண அனுமதி அட்டை, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பவை அடங்கியபொதி தவறிவிட்டது இதனை கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனை, அல்லது அக்கராயன் காவல்பணிமனை, முழங்காவில் காவல் பணிமனையிலோ ஒப்படைத்து உதவவும் இதற்கான சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:- க.லிங்கேஸ்வரன்
ஈழநாதம்

(சி.12049)

## முச்சக்கர வண்டி உரிமையாளர் கவனத்திற்கு

எமது சங்கத்தில் பதிவு செய்து தங்களுக்கு வழங்கப்பட்ட தரிப்பிடங் களுக்கு வருகை தராமல் இருப்ப வாகளும் ,முச்சக்கர வண்டிகளை விற்று தரிப்பிட பதிவு வைத்திருப்பவர்களும் எதிர்வரும் 20. 06. 2005 ஆம் திகதிக்கு முன் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்

செயலாளர்

மு.ச.வ. உரிமையாளர் சங்கம்
கிளி. மாவட்டம் (6260)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

இல 59/3 முரசுமோட்டையில் வீடு,கிணறுடன் தென்னை, மா மற்றும் ஏனைய பயன் தரும் மரங்கள் அடங்கியகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்வோர் நேரில் வரவும்

(6256)

### தவறிவிட்டது

எனது தேசிய அடையாள அட்டை முகமாலைக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைத்தோ அல்லது கீழ்க்காணும் முகவரிக்கோ அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:- நவரத்தினம் அரியமலர்
சங்குவேலி
அம்மன்கோவிலடி
மானிப்பாய் தெற்கு.

(சி.12050)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை மல்லாவி வீதி,வன்னிவிளான்குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு.

5"x6"x12"- ரூபா.23.00
4"x6"x14"- ரூபா .20.00

(6210)

## சாவு அறிவித்தல்

மலர்வு 1967 ✶ 09 ✶ 02

உதிர்வு 2005 ✶ 06 ✶ 08



திரு.அல்பிரட் டானியல்(றஜன்)

122,கட்சன் வீதி வட்டக்கச்சியைச் சேர்ந்தவரும் ,சுவிஸில் வாழ்ந்தவருமான திரு. அல்பிரட் டானியல்(றஜன்) அவர்கள் 08-06-2005 அன்று சுவிஸ்லாந்தில் காலமானார். அன்னார் யாமினியின் (நீர்வேலி தெற்கு நீர்வேலி) அன்புக் கணவரும், செரோமி,அலெக்சான்டர் ஆகியோரின் அன்புத் தந்தையும், வஸ்தியாம்பிள்ளை தாசிலம்மா தம்பதிகளின் அன்பு மகனும், குணரத்தினம்சிவநேசமலரின் அன்பு மருமகனும்,ஜெனோ(வட்டக்கச்சி),உஷா (லண்டன), பபி(சுவிஸ்), டக்ளஸ் (ஜேர்மனி), குயின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கதிர்காமநாதனின் (கமத்தொழில் காப்புறுதிச் சபை வவுனியா) சகலனும், சிவாஜினி (கந்தபுரம் வாணிவித்தியாலயம் வவுனியா), மோகனதாசன் (லண்டன்), செல்வம் (சுவிஸ்),வின்சன் (ஜேர்மனி), கெலேனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜனி, நான்சி, கபில்ராஜ், யதுராஜ் ,அஜந்தன், கானு, விரோஜ், றோஸ்ரன், ஒறினா, லூசினா,எறோஜன், யூனியா ஆகியோரின் மாமனாரும், அனுஷாந், ஆசிகா, அலிசா ஆகியோரின் சித்தப்பாவுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சுவிட்சர்லாந்தில் நடைபெறும் என்பதை உற்றார் , உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்

தகவல்:-
ப. கதிர்காமநாதன்
155/7 ஸ்ரீலக்சுமி வீதி
தோனிக்கல்
வவுனியா. 0777 570043

சுவிஸ்:- 00411 9205976
ஜாமினி மனைவி.

(6261)

## வீடு விற்பனைக்குண்டு

புலோலி தெற்கு பல்லப்பையல் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்பவர்கள் பொன் பொழில் இல்லம், பல்லப்பை-தெற்கு புலோலி. தொடர்பு -நிருஷன் 077-3164361.

(6257)

## நீங்காத நினைவில் ஈராண்டு

பிறப்பு 30 ❁ 11 ❁ 1976

வீரச்சாவு 14 ❁ 06 ❁ 2003



லெப்.கேணல் அன்புக் குமரன்

14.06.2003 அன்று காவியமான
லெப்.கேணல் அன்புக்
குமரனின் நினைவுடன்
தாய் நிலத்தின் விடிவிற்காய்
தன்மானத் துணிவோடு
தானைத் தலைவனின் வழி
வந்துதித்த எம் உத்தமனே
அன்புக் குமரா......
கொடிய பகைவனின்
கொட்டத்தை அடக்கி
நாம் ஒன்றும் ஓயோமடா
என்ற இறுமாப்புடன்
களம் பல கண்டு கடலோடு
கடலாக அலையோடு
அலையாக
அயராது உழைத்தவனே
வீசுகின்ற காற்றும் துடிக்கின்ற
அலையும் உன் பெயரை
கூறி நிற்க உயர் கடலில்
உன் பணியின் சிறப்பை
ஊரும் பேசுதையா
அன்புக் குமரா.....
அன்பான பேச்சும் உன்
வீரமும் உன் நினைவும்
என்றும் எம்மை விட்டு
அகலாது
உன் இலட்சியம் நிறைவேற
எமைவிட்டு ஆழ்கடலில்
சங்கமமானாய் .

இதே தினத்தில் இவருடன் வீரகாவியமான 12 வேங்கைகளையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

14. 06. 2005 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் இரண்டாம் ஆண்டு நினைவலைகளில் அனைத்துப் போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:- குடும்பத்தினர்

தற்காலிக முகவரி
இரணைப்பாலை வீதி,
5ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

(6170)

# பாடசாலையை அடித்துச் சென்றது வெள்ளம்: சீனாவில் 64 மாணவ மாணவிகள் உயிரிழப்பு

(பீஜிங்)

**சீனாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடை மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக உயிரிழப்போர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.**


சீனாவில் தென்மேற்குப் பகுதியில் கடந்த சில நாட்களாகவே பலத்த மழை பெய்து வருகின்றது. ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஏராளமான கிராமங்களை மூழ்கடித்தது. ஆயிரக்கணக்காக வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. பயிர் நிலங்களும் மூழ்கியது. பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுக்கு ஏற்கனவே 230 பேர் பலியாகி விட்டனர்.

தொடர்ந்து அங்கு பலத்த மழை பெய்து வருகிறது. தெற்குப் பகுதியிலுள்ள கிராமத்தில் பாடசாலையை வெள்ளம் அடித்துச் சென்றது. அந்தப் பாடசாலையில் இருந்த மாணவ, மாணவியர் 64 பேர் தண்ணீரில் மூழ்கிப் பலியானார்கள்.



பலியான மாணவர்களின் உடலை மீட்க இராணுவத்தினரும், மீட்புப் படையினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு உலங்கு வானூர்திகள் மூலம் உணவுப் பொதிகள் போடப்பட்டு வருகின்றன.



பிரான்சைச் சேர்ந்த அலென்ராபர்ட் (வயது-42) அலென் ராபர்ட் கயிறு, ஏணி எதையும் பயன்படுத்தாமல் உயரமான கட்டடங்களின் சுவரைப் பிடித்து ஏறிச் சாதனை நிகழ்த்தி வருகிறார். இப்போது கொங்கொங்கில் உள்ள 62 மாடி செங்காக் கட்டடத்தின் மீது ஏறி இவர் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

அவற்றைப் பிடித்தபடியே அவர் 283 மீற்றர் உயரம் உள்ள அந்தக் கட்டடத்தின் மீது ஏறி சாதனை நிகழ்த்தினார். சிலந்தி மனிதன் (ஸ்பைடர் மேன்) என்று அழைக்கப்படும் அலென் ராபர்ட் ஏற்கனவே கோலாலம்பூரிலுள்ள பெட்ரோனோஸ் இரட்டை கோபுரம் நியுயோர்க்கிலுள்ள எம்பயர்ஸ்டேட் கட்டடம், பாரிஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரம் ஆகியவற்றின் மீது ஏறிச் சாதனை புரிந்திருக்கிறார்.




பலஸ்தீனத்தில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள மூவருக்கும் நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற வளவில் காவலில் இருக்கும் பலஸ்தீனப் பொலிசார்.

## மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்குதல் ஆறு இராணுவத்தினர் உட்பட 8 பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் பேருந்து மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டனர்.

நேபாளத்தில் காத்மண்டுவில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் காவ்ரி மாவட்டத்திலேயே மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பேருந்து மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் போது பேருந்தில் பயணம் செய்த ஆறு இராணுவத்தினர் உட்பட எட்டுப் பேர் மீது பலியாகினர். 19 இராணுவத்தினர் உட்பட 22 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் இராணுவ உலங்கு வானூர்தி மூலம் காத்மண்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கடந்த ஒரு வாரத்தில் பேருந்து மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இரண்டாவது முறையாக தாக்குதல் நடத்தியுள்ளனர். கடந்த வாரம் தீவிரவாதிகள் வைத்த கண்ணி வெடியில் பயணிகள் பேருந்து சிக்கிச் சிதறியது. அதில் பயணம் செய்த 38 பயணிகள் பரிதாபமாகப் பலியாகினர். 70 பேர் காயமடைந்தனர்.



பாக்தாத்தில் அமைந்துள்ள மேம் பாலத்தில் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்காவின் இராணுவ கோப்ரல் தர அதிகாரி மனுவல் ஜேம்ஸ்.

## அமெரிக்கப் படையினர் தாக்குதல் 40 தீவிரவாதிகள் பலி; பலர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் 40 தீவிரவாதிகளைக் கொன்று விட்டதாக அறிவித்துள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் தீவிரவாதிகள் கார்க்குண்டுத் தாக்குதல்களை அதிகரித்து வருகிறார்கள். இதுவரை 1200 இற்கும் அதிகமான அமெரிக்கப் படையினர் தீவிரவாதிகளின் கார்க்குண்டுத் தாக்குதல் களுக்குப் பலியாகியிருக்கிறார்கள்.

இதையடுத்து தீவிரவாதிகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் வேட்டையிலும் அவர்களது ஆயுதக் கிடங்குகள், பதுங்கு குழிகள் ஆகியவற்றை அழிப்பதிலும் அமெரிக்கப் படை ஈடுபட்டுள்ளது.

ஈராக்கின் மேற்குப் பகுதியில் சிரியா எல்லையை அண்டிய பகுதியில் தீவிரவாதிகள் முகாம்கள் அமைத்துச் செயற்படுவதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அமெரிக்க விமானங்கள் அந்தப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஏழு விமானங்கள் ஒரே நேரத்தில் தீவிரவாதிகளின் முகாம்கள் ஆயுத கிடங்குகள் மீது குண்டு மழை பொழிந்தன. அந்த முகாம்கள் இதில் தகர்க்கப்பட்டன.

அமெரிக்கப் படையினரின் இந்த அதிரடித் தாக்குதலில் 40 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏராளமான தீவிரவாதிகள் சிரிய நாட்டிற்குள் தப்பியோடி விட்டனர். நான்கு மணி நேரம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாம்.

பாக்தாத் நகரின் மேற்குப் பகுதியில் சென்று கொண்டிருந்த மினி பஸ் மீது தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினார்கள். இதில் பத்துப் பயணிகள் பலியானார்கள்.

## ரயில் மீது குண்டுத் தாக்குதல் செச்னியாவில் 12 பேர் காயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் செச்னியாவை நோக்கிச் சென்ற பயணிகள் ரயில் குண்டு வெடிப்பால் தடம் புரண்டதில் 12 பேர் காயமடைந்தனர். சோவியத் யூனியன் உடைந்த பிறகு பல மாகாணங்கள் தனி நாடுகளாக அறிவிக்கப்பட்டன. செச்னியாவும், தனி நாடாக அறிவித்துக் கொண்டது. ஆனால் அதற்கு ரஷ்யா அங்கீகாரம் அளிக்கவில்லை. இதைத் தொடர்ந்து தனி நாடு கோரி செச்னிய தீவிரவாதிகள் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ரஷ்ய இராணுவம் இவர்களை ஒடுக்கி வருகிறது.

இந் நிலையில் நேற்று முன்தினம் செச்னிய தலைநகர் குரோஸ்னியை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததால் ரயில் தடம் புரண்டது. இந்த விபத்தில் 12 பேர் காயமடைந்தனர். பலத்த காயமடைந்த இரண்டு பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு யாரும் பொறுப்பேற்கவில்லை. குண்டு வெடிப்பால் அப் பாதையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

## ஈரானில் தொடர் குண்டு வெடிப்பு மூன்று பேர் பலி; பலர் காயம்

(டெக்ரான்)

ஈரானின் தென்மேற்கிலுள்ள எண்ணெய் நகரமான அக்வாசில் அடுத்தடுத்து மூன்று குண்டுகள் வெடித்தில் மூன்று பேர் பலியானதாக ஈரான் உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

ஈரான் தலைநகர் டெக்ரானில் இருந்து 550 கீ.மீ தொலைவில் உள்ள அக்வாஸ்சின் எண்ணெய் வளம் நிறைந்த இந் நகரத்திலேயே திடீரென மூன்று குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன.

குண்டு வெடிப்பு நடந்த பகுதியில் வீடு மற்றும் நகர்ப்புற திட்டத்துறை மேலாண்மை மற்றும் திட்டத்துறை அரச அலுவலகங்கள் செயற்படுகின்றன. குண்டு வெடித்ததில் கட்டடத்தின் கண்ணாடி யன்னல்கள் நொருங்கின. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 15 கார்கள் சேதமடைந்தன. இச் சம்பவத்தில் மூன்று பேர் பலியானதாக ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறினார்.



யமேக்காவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது அந் நாட்டு பிரதமரின் சேவையை பாராட்டுத் தெரிவித்து உரையாற்றும் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர்.

## தீவிரவாத தடுப்பு அமைப்பின் தலைவராக ஓய்வு பெற்ற வைஸ் அட்மிரல் நியமனம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தீவிரவாதத் தடுப்பு அமைப்பின் தலைவராக ஓய்வுபெற்ற வைஸ் அட்மிரல் ஜான் ரெட் (வயது-60)நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அமைப்பைத் தொடங்குவது குறித்த தீர்மானம் அமெரிக்க பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இத்தீர்மானத்துக்கு அதிபர் புஷ் ஒப்புதல் அளித்தார். இந்த மையம் வர்ஜீனியா மாநிலத்தின் மக்வீன் நகரில் அமைந்துள்ளது.

## இந்திய தொழிலதிபர் ராமி ரங்கருக்கு பிரிட்டிஷ் பேரரசின் உறுப்பினர் கௌரவம்

(லண்டன்)

பிரிட்டனில் வாழும் இந்தியத் தொழிலதிபர் ராமி ரங்கருக்கு பிரிட்டிஷ் பேரரசின் உறுப்பினர் என்ற கௌரவத்தை எலிசபெத் ராணி அளித்துள்ளார்.

தொழில்துறைக்கும் பிரிட்டனில் வசிக்கும் ஆசிய சமூகத்தினருக்கும் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவருக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இப்போது பாகிஸ்தானில் இருக்கும் குர்ஜாவாலா என்ற இடத்தில் பிறந்தவர் ராமி ரங்கர்.


தேசப் பிரிவினையின் போது இந்தியாவுக்கு குடிபெயர்ந்தார். 1971இல் பிரிட்டன் சென்ற அவர் 1987 இல் வெறும் இரண்டு பவுண்ட் மூலதனத்தில் ஒரு ஷெட்டில் சீ ஏர் அண்ட் லாண்ட் என்ற அவரது நிறுவனத்தைத் தொடக்கினார். படிப்படியாக வளர்ந்த அவர் 1995 இல் சன் ஓயில் லிமிடெட் என்ற நிறுவனத்தைத் தொடக்கினார்.

பிரிட்டிஷ் பொருட்களை 40 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததற்காக சில ஆண்டுகளுக்கு முன் ஏற்றுமதி சாதனைக்கான விருதை ராணி எலிசபெத்திடம் இருந்து ராமி ரங்கர் பெற்றார்.

# தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் அவசியம் இன்று

# சிங்கள பேரினவாதிகளால் சர்வதேசத்திற்கு உணர்த்தப்படுகிறது

## –திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கருத்து



(திருமலை)

**"பொதுக்கட்டமைப்புக்கெதிராக தென்னிலங்கையில் ஜே.வி. பி யும், பிக்குகளின் ஜாதிகஹெல உறுமய அரசியல் கட்சியும் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. இது விடுதலைப் புலிகளின் தமிழீழ விடுதலைப்போராட்டத்தையும், அதன் தேவையையும் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது." என்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.**

மூதூர் கிழக்கு கடற்கரைச்சேனையில் நேற்று முன்தினம் சமூகபொருளாதார வங்கியின் திருகோணமலை கிளையின் புதிய கட்டடத்திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசும்போது சி.எழிலன் இவ்வாறு தெரிவித்தார்.

"பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உடன்படிக்கைகளை விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் செய்துகொள்ளவேண்டும் என்றும், வேண்டாம் என்றும் சிங்களவர்களுக்கிடையில் போராட்டம் ஆரம்பித்துள்ளது. இலங்கை அரசியலில் இன்றைய நிலைஇது. இதில் விடுதலைப்புலிகள் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கின்றனர்." என்றும் எழிலன் குறிப்பிட்டார்.

"எங்களுடைய சுதந்திரம், விடுதலை எங்களால்தான் ஏற்படுத்தப்படவேண்டும். இவற்றை வேறு யாராலும் தந்துவிடமுடியாது. என்பதை இன்றைய இலங்கை அரசியல் நிலவரம் எங்களுக்கு உணர்த்தி நிற்கின்றது"

"மூன்று வருடங்களுக்கு மேலாக நீடிக்கும் யுத்தநிறுத்த காலத்தில் நாம் பல படிகள் இறங்கி வந்துள்ளோம். தமிழீழம் என்ற இலட்சியத்துடன் விடுதலைப்போராட்டத்தை நடத்திய நாம் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு காணுவது பற்றிப் பேசலாம் என்று கூறினோம். அதற்கு முன்னோடியாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன்வைத்தோம். இடையில் கடற்கோள் வந்தது. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட எமது கடலோரப்பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்ய பொதுக்கட்டமைப்பு யோசனையை முன்வைத்தோம். இதனை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் சிங்கள அரசாங்கம் இருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பு விடுதலைப்புலிகளின் தனிநாட்டை அமைக்க உதவுமென்று ஜே.வி.பியும், பிக்குகள் கட்சியும் எதிர்க்கின்றன. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் புனரமைக்கவே பொதுக்கட்டமைப்புக் கொண்டு வரப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ளாதவர்களாக எதிர்ப்பவர்கள் உள்ளனர்.

கடந்த காலங்களில் சிங்கள அரசியல்வாதிகள் மாத்திரம் தான் விடுதலைப்புலிகளை எதிர்த்து வந்தனர். இப்போது பிக்குகள் முழுமூச்சாக எதிர்க்க ஆரம்பித்துள்ளனர். இதனால் பிக்குகளை மிஞ்சி சிங்கள அரசியல் வாதிகளால் ஒன்றுமே செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சனாதிபதி இன்று குழப்பமடைந்துள்ளார். பிக்குகளின் எதிர்ப்பை மீறி பொதுக்கட்டமைப்பைத் தருவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தயாராக இல்லை. இந்தியாவும் பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இனவாதிகள் மாத்திரம்தான் பொதுக்கட்டமைப்பை வழங்கக்கூடாது என்று கோருகின்றார்கள் என்றும் எழிலன் தெரிவித்தார். (25)

## சமகால அரசியல் கருத்தரங்கும் கிராம தரிசிப்பு நிகழ்வும்

(வட்டக்கச்சி)

பெரியகுளம் பகுதியில் தற்போதைய அரசியல் நிலைமைகள் சம்பந்தமான சமகால அரசியல் கருத்தரங்கு கடந்த வியாழன் மாலை 5.00 மணிக்கு வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் சுடர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள், பொதுஅமைப்புக்கள், கிராம சேவையாளர்கள் இன்னும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். சிறப்புரையைப் பிரதேசப் பொறுப்பாளர் சுடர், அரசியல்துறை நடுவப்பணியகத்தைச் சேர்ந்த அன்ரனி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரையும் போராளிகளும், பொது அமைப்புக்களின் உறுப்பினர்களும் இணைந்து கிராம தரிசனம் இடம்பெற்றது. வீடுவீடாகச் சென்று சமகால அரசியல் நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் கூறி விளக்கம் அளித்ததும் குறிப்பிடத்தக்கது. (12)

## சரஸ்வதி முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்புவிழா

(அலுவலகசெய்தியாளர்)



வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் வவுனியா கல்மடுவில் அமைக்கப்பட்டுள்ள சரஸ்வதி முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்புவிழா நிகழ்வு வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக டென்மார்க் அகதிகள் பேரவையின் இலங்கைக்கான பிரதி வதிவிடப்பிரதிநிதி ரஞ்சன், தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட இணைப்பாளர் தயானந்தன், வவுனியா மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தர்மேந்திரா, கல்மடுமகாவித்தியாலய அதிபர் செல்வதேவன் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்,மாணவர்கள், பொதுமக்களெனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப்பணிப்பாளரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் டென்மார்க் அகதிகள் பேரவைப் பிரதிநிதி பாடசாலையினை வைபவரீதியாக நாடாவினை வெட்டித்திறந்து வைக்க முன்பள்ளியின் கல்வெட்டினை கல்மடுமகாவித்தியாலய அதிபர் திறந்து வைத்தார்.

டென்மார்க் அகதிகள் பேரவையின் நிதிப்பங்களிப்புடன் வவுனியா மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் அமைக்கப்பட்டுள்ள இந்த முன்பள்ளியானது சுமார் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியுடையதாகும். இங்கு அமைக்கப்பட்டுள்ள முன்பள்ளி சிறுவர்கள் சிறப்பான தொரு சூழலில் கல்வி கற்கக் கூடியவாறு கல்விசார் வசதிகளும், விளையாட்டு உபகரண வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கு)

## முன்பள்ளிச் சிறார்களின் அவலம் தீர்க்க உதவுக!

வட்டக்கச்சிப் பகுதியிலுள்ள இராமநாதபுரம் முன்பள்ளி கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக மிக மோசமான நிலையில் இயங்கிவருகிறது. இதனால் இங்கு சிறார்களின் கற்றல் நடவடிக்கைகள் பெரிதும் சீர் குலைந்துள்ளது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் பெய்த கடும் மழையினால் ஓலைக் கொட்டகையில் இயங்கி வந்த இந்த முன்பள்ளியின் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இதில் கால்நடைகள் இரவில் தங்கி வருவதால் [illegible]கள் கொட்டகையிலிருந்து [illegible] கற்றல் நடவடிக்[illegible] வருகின்றனர். அத்தோடு கொட்டகையும் சரிந்து விழும் அபாயநிலையிலுள்ளது.

கடந்த ஆறுமாதங்களாக இதனைப் புனரமைக்க உதவுமாறு கோரிக்கை விடப்பட்டும் இன்றுவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

முன்பள்ளியின் இந்த அவலமான நிலைமையில் சிறார்களின் வருடாந்த விளையாட்டுவிழா கூட பிற்போடப்பட்டு வருவதும் இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது.எனவே சிறார்களின் சீரான கல்வி நடவடிக்கைக்கு உதவிபுரியுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழீழத்தின் கால்நடை மேம்பாட்டிற்கு கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

தமிழீழ மாவட்டங்களில் நலிந்து போயிருக்கும் கால்நடை வளர்ப்பினை மேம்படுத்தி கால்நடை அபிவிருத்தியினை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகக்கேட்போர் கூடத்தில் த.பொ.மே நிறுவன பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் நடைபெற்றது.

கால்நடை அபிவிருத்தியினை எவ்வாறு மேம்படுத்தலாம் என இக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதுடன் நலிந்து போயுள்ள கால்நடை வளர்ப்பினை மேற்கொள்ள துறைசார்ந்த அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள (மேற்கு உதவிப்பணிப்பாளர்), கிளிநொச்சி மாவட்ட அரச கால்நடை வைத்தியர்கள், த.பொ. மே. நிறுவன திட்டமிடல் பொறுப்பாளர், திட்டமிடல் அலுவலர், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மகிந்தன். கிளிநொச்சி மாவட்ட செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (15)

## புதிய நிர்வாகத் தெரிவு

பூநகரி கமநல கேந்திர புதிய நிர்வாகத் தெரிவு கடந்த செவ்வாய்க் கிழமை பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி தலைமையில் இடம் பெற்றது.

தலைவராக இரா செல்வராசாவும், செயலாளராக த.சண்முகலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர். இத்தெரிவில் 18 கமக்கார அமைப்புகள் கலந்து கொண்டன. தொடர்ந்து இரா செல்வராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயப் போதனாசிரியர் திருமதி நசத்தியாவதி, பூநகரி பொருண்மிய இணைப்பாளர் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து பெரும்பாக உத்தியோகத்தர் அபிவிருத்திசம்பந்தமாக உரையாற்றினார். இறுதியாக செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுபெற்றது. (34)

## மாதிரி விற்பனை நிலையம் பரந்தன் நகரில் திறப்பு

பரந்தன் பேருந்து நிலையப் பகுதியில் பரந்தன் கரைச்சி வடக்கு ப.நோ.கூ சங்கத்தால் அமைக்கப் பட்ட மாதிரி விற்பனை நிலைய கட்டடத் திறப்புவிழா கடந்த வெள்ளிக் கிழமை சங்கத்தலைவர் மா.நடராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கை கிளி.மாவட்ட தமிழீழ நிர்வாகசேவை கூட்டுறவுப்பகுதிப் பொறுப்பாளர் மயூரன், கரைச்சிப் பிரதேசசபை முரசு மோட்டை உபஅலுவலக பொறுப்பதிகாரி விக்கினேஸ்வரன் ஆகியோர் ஏற்றினர்.

மாதிரி விற்பனைநிலைய பெயர்ப் பலகையை மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் ப.கந்தசாமி திரைநீக்கம் செய்துவைத்தார். விற்பனை நிலையகட்டத்தை கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (14)

## கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

ஜோன் அந்தோனிதாஸ் கிறிஸ்ரி லெனாட் கூமாங்குளம் வவுனியா (843461174V) என்பவரின் தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப் பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (15)

## கால்நடைகளுக்கான மருந்து, உணவு விற்பனை நிலையம் திறப்பு

(ஒட்டுசுட்டான்)



கால்நடைகளுக்கான மருந்து, உணவு வகைகளுக்கான விற்பனை நிலையம் கிளிநொச்சி 155ஆம் கட்டப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்ற, பெயர்ப்பலகையினை காராளி செயற்கைமுறைச் சினைப்படுத்தும் நிலைய முகாமையாளர் மகாதேவன் திரை நீக்கம் செய்துவைத்தார். விற்பனை நிலைய நாடாவினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் திரைநீக்கம் செய்துவைத்தார். (05)

# படையினரின் நடவடிக்கைகளைக் கண்டித்து மூன்று தினங்கள் உண்ணாவிரதப் போராட்டம்

## -தென்மராட்சி வணிகர் கழகங்களின் ஒன்றியம் ஏற்பாடு

(தென்மராட்சி)

**வரும் புதன்கிழமை முதல் மூன்று தினங்கள் தென்மராட்சி வணிகர் கழகங்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த மூன்று வருடங்களில் சிறிலங்கா அரசின் பாரபட்ச நடவடிக்கைகளைக் கண்டித்து மாபெரும் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.**

தென்மராட்சி வணிகர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வரும் புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களில் கண்டன அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்வதென நேற்று மாலை சாவகச்சேரி வணிகர் மன்றத்தில் இடம்பெற்ற தென்மராட்சி வணிகர் கழகங்களின் ஒன்றியத்தின் விசேட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சமாதானம் என்ற பெயரில் கடந்த மூன்று வருடங்களில் அரசின் ஒடுக்குமுறைகளையும், உரிமைமறுப்பையும் கண்டித்து சாத்வீகப்போராட்டத்தை வர்த்தகர்கள் மேற்கொள்ள இருக்கின்றனர். வரும் புதன்கிழமை சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு முன்னால் ஒன்பது மணியிலிருந்து இரண்டுமணிவரையும், வியாழக்கிழமை கைதடிச்சந்தியிலும், வெள்ளிக்கிழமை கொடிகாமம் பேருந்து நிலையத்திற்கு முன்னாலும் இப்போராட்டம் இடம்பெற இருப்பதாக தென்மராட்சி வணிகர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (28)

# யாழ்.இல் சட்டம் ஒழுங்கை பேண தமிழ் தெரிந்த பொலிசார் இல்லை

## ம.உ. ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு வேண்டிய தமிழ் பொலிசார் கடமையில் இல்லாமையே யாழ் குடாநாட்டில் பிரச்சினைகளுக்குக் காரணம் என மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு வாரமாக யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு நேரில் சென்று மனித உரிமைகள் ஆணைக் குழுவைச் சேர்ந்த இரு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வந்தார்கள். இதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் உள்ள 14 பொலிஸ் நிலையங்களுக்கும் சென்ற இவர்கள் அங்குள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் நேரில் கலந்துரையாடினர். இதனைத் தொடர்ந்து பொலிஸ் நிலையங்களில் போதிய தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்மையால் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்யச் செல்பவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையில் இருப்பதை நேரில் கண்டுள்ளார்கள். பொதுமக்கள் கூறுவதை முழுமையாகப் பொலிசார் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதையும் பொலிசார் கூறுவதை பொதுமக்கள் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை உத்தியோகத்தர்களான எம்.வி.சற்.பெரோஸ், சுவேந்திரராஜா ஆகியோர் நேரில் கண்டறிந்துள்ள்னர். இது சம்பந்தமாக பொலிஸ் மா அதிபருடன் நேரில் கலந்துரையாடவுள்ளனர்.

# குருநகர் இளைஞர்கள் இருவரின் கொலை குறித்து நீதியான விசாரணை நடத்த குருநகர் ஐ.முன்னணி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கொழும்பு நகரப்பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட குருநகர் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களினது மரணம் தொடர்பாக நியாயமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென குருநகர் ஐக்கிய முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த ஐந்தாம் திகதி கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்த குருநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களான பிரான்சிஸ் றெனிசியல் (வயது-25) மற்றும் அவரது மைத்துனனான தேவதாஸ் இம்மனுவேல் (வயது-26) ஆகிய இருவரது பூதவுடல்களும் நேற்று முன்தினம் இறுதி அஞ்சலிகளின் பின்னர் அடக்கம் செய்யப்பட்டன.

இவர்களின் இறுதி அஞ்சலியின் போதே நீதியான விசாரணைகளைக் கோரும் மகஜர்களைகுருநகர் ஐக்கிய முன்னணி சனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் மற்றும் நீதிக்கும் சமாதானத்திற்குமான நல்லெண்ணக் குழுவைச் சேர்ந்த வணபிதா பி.ஜே.பேர்னாட் ஆகியோரிடமும் கையளித்துள்ளது.

குறிப்பாக கொழும்பின் பாதுகாப்பு மிக்க பகுதியில் வைத்து இவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள மக்கள், குற்றவாளிகள் இனங்காணப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே குறித்த இரு இளைஞர்களினதும் படுகொலையினைக் கண்டித்து கடந்த ஐந்து தினங்களாக குருநகர் பகுதியில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இந் நிலையில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்ற தினம் முழு அளவில் அப்பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச்சந்தைகள் மூடப்பட்டிருந்தன. மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் சென்றிருக்கவில்லை. இளைஞர்கள் இருவரதும் பூதவுடல்கள் தாங்கிய பேழை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு குருநகர் கலையரங்கில் வைத்து அஞ்சலிக்கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. பின்னர் அப்பகுதியிலுள்ள கொஞ்சேந்தி மாதா, சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (27)

# மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவின் 11 ஆவது ஆண்டு நினைவு தினம்

மாமனிதர் பேராசிரியர் துரைராஜா அவர்களின் நினைவு தினம் வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரியர் துரைராஜா அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் அத்தோடு தமிழ் மக்களின் வாழ்வில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டவர். எல்லோர்க்கும் எல்லாச் செயற்பாட்டிலும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். துணைவேந்தர் பதவிக்கான வசதிகளைப் புறந்தள்ளி சராசரி மனிதனாக வாழ்ந்தவர். தமிழ் தேசியத்திற்காக அயராது உழைத்தவர். இவரது 11ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் புதன்கிழமை யாழ். பல் கலைக்கழகத்தில் மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது இந் நிகழ்வில் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், மாணவர்கள் தமிழீழ விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தே.எ.பேரவையின் ஏற்பாட்டில் கிராமிய மேம்பாட்டு வேலைத்திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ். நல்லூர் தேசிய எழுச்சிப்பேரவையினரின் ஏற்பாட்டில் கிராமிய மேம்பாட்டு வேலைத்திட்டம் நடைபெறவுள்ளது.

J/114 கிராம சேவகர் பிரிவில் நடைபெறவுள்ள மேற்படி வேலைத் திட்டம் அரசியல், சமூக, பொருளாதார கட்டுமானங்களை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத்தரத்தை விருத்திசெய்யுமுகமாக நடமாடும் சேவை, மருந்துவ சேவை, பொருளாதார அபிவிருத்திச்செயற்பாடுகள் கல்வி,கலை, கலாச்சார,விளையாட்டு செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (சு)

# கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துக கோயிலாக்கண்டி மக்கள் கோரிக்கை

கைதடிதெற்கு, கோயிலாக்கண்டி பிரதேசத்தில் இடம்பெற்று வரும் கசிப்பு உற்பத்தி விற்பனைகளை கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.கடந்த பல மாதங்களாக கைதடி தெற்கு, கோயிலாக்கண்டி பிரதேசத்தில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தியும் விற்பனையையும் கட்டுப்படுத்தி குடியினால் மலிந்து வரும் குடும்பப் பிரச்சினைகளையும் சமூக பிறழ்வுகளையும் தடுத்து நிறுத்துமாறு இப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்டதரப்பை வேண்டி இருப்பதாக தெரியவருகிறது.

மற்றும் இங்கு உற்பத்தி செய்யப்படும் கசிப்புகள் இப்பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு எடுத்து செல்லப்படுவதாய் பிரச்சினைகள் அதிகரிப்பிற்கு இந்த மலிவுவிலை மதுவும் ஒரு காரணம் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

# தமிழ் மக்களின் இழந்த இறைமையைமீட்டுஎடுப்புதற்கு தீர்க்கமான முடிவெடுக்கும் காலம் அண்மித்துவிட்டது

## -யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

இலங்கைத்தீவில் தமிழர்கள் பூர்வீகக்குடிகள் இவர்களுக்கு பாரம்பரியமான வரலாற்றுப் பின்னணிகள் உண்டு. சிங்கள மக்களுடன் ஐக்கியமாகவே வாழ விரும்பினர். ஆயினும், சிங்கள ஆட்சியாளரும் பௌத்த பேரினவாதிகளும் திட்டமிட்டு பல்வேறு தடைகளைப் போட்டு தமிழ், சிங்கள ஒற்றுமையை குழிதோண்டிப் புதைத்த கறைபடிந்த அந்த வரலாறு தமிழர்களைக் காயப்படுத்தியுள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக தமிழர் உரிமைக்காகப் போராடிய தலைவர்கள் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் எள்ளி நகையாடப்பட்டு தாக்குதலுக்கு ஆளாகிவந்தனர். தமிழ்த் தலைவர்கள் அகிம்சை ரீதியாக கால்நூற்றாண்டு காலமாகப் போராடினர். அப்போராட்டம் அனைத்தும் ஆயுதப்பலம் கொண்டு சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டது. தமிழ்த் தலைவர்களால் உரிமைக்காக எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் எழுதிய மை காய்வதற்குள் கசக்கி எறியப்பட்டது. தமிழ் தலைவர்கள் அகிம்சை ரீதியாகப் போராடி தமது இயலாமையை வெளிப்படுத்திய போது வேறுவழியின்றி தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர்.

அன்று தொடங்கிய தமிழர்களின் ஆயுதப் போராட்டம் இன்று கூர்மையடைந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் அனைவரும் அணி திரண்டு தமது இழந்து போன தாயகத்தை மீட்கப் போராடி வருகின்றனர். அரசியல்,இராணுவ ரீதியாக தமிழ் மக்கள் பலம் பொருந்தி நிற்கின்ற இன்றைய சூழலில் கூட சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்க முன்வரவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்,இலங்கை ஆட்சியாளர்களுக்கும் பேச்சுவார்த்தை நடைபெற்றும் போர் நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வு கிட்டவில்லை.

அரசு,புலிகள் உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைக் கூட சிங்கள ஆட்சியாளர்களால் அமுல் படுத்த முடியவில்லை. இச்செயலானது சிங்கள பௌத்த பேரினவாதிகளின் மேலாண்மை இருக்கும் வரை தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை சிங்கள ஆட்சியாளர்களால் கொடுக்க முடியாது என்பது தெட்டத் தெளிவாக எமக்குப் புலனாகின்றது.

தமிழர்கள் தாம் சுதந்திரமாக வாழ்வதற்கு தமக்கென்று என ஒரு தனி நாடு அமைந்தால் தான் தாம் சுதந்திரமாக வாழ முடியும் என்பதை நன்றாக உணர்ந்திருந்தனர். தனிநாட்டுக்காகப் போராடிய தமிழர்களுக்கு தமிழீழம் தான் முடிந்த முடிவு இதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இருக்கவில்லை. அப்போதுதான் சிங்கள ஆட்சியாளர்கள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கு முன்வந்தார்கள் அதனால் தான் விடுதலைப் புலிகளினால் தன்னாட்சிஅதிகார சபை முன்வைக்கப்பட்டது. இதனையும் சிங்கள ஆட்சியாளர்கள் வழங்க முன்வரவில்லை. இடையே சுனாமி வந்ததுபொதுக்கட்டமைப்பை சிங்கள ஆட்சியாளர்கள் தருவோம் என்றார்கள் இப்போது ஒன்றும் இல்லை என்கிறார்கள் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கக் கூடாது என்பதில் சிங்கள பேரினவாதிகள் உறுதியாக நிற்கின்றார்கள்.மேலும் ஒரு படியாக ஜே.வி.பி,ஜாதிகஹெலஉறுமய போன்ற கட்சிகளும் தமிழர்களை விழுங்கிவிடவே முயற்சிக்கின்றன.

தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் புறம்தள்ளப்பட்டு தமிழ் இனத்தை அழிப்பதற்காக சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாதிகளும், ஜே.வி.பி.ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளும் முனைப்பான அராஜக செயற்பாடுகளில் கடந்த சில நாட்களாக ஈடுபட்டு வருகின்றன. இது முழு இலங்கையையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

தமிழரின் அரசியல் உரிமைக்கு தடைபோடும் சிங்கள பௌத்த பேரினவாதம் அவசர மனிதாபிமான பணிகளுக்குக் கூட முட்டுக்கட்டை போடுகின்றது. இதனால் யுத்த அனர்த்தத்திற்குள் சிக்கித் தவிக்கும் தமிழ்மக்களுக்கு இயல்பு வாழ்வும் இல்லை.உடனடிமனிதாபிமான உதவிகளும்இல்லை. இன்னும்எத்தனை நாட்களுக்கு பொறுமைகாப்பது.இன்னும் பொறுமை காத்தாலும் ஏதேனும் பயன் கிட்டுமா?சர்வதேச சமூகம்தான்இதற்கு பதில் செல்ல வேண்டும்.

தமிழ் மக்களின் பொறுமைக்கு இனி ஏது எல்லை.? பொறுத்தது போதும் பொங்கி எழு தலைவா? என போர்க்குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.வடக்கே நெடுந்தீவில்இருந்து கிழக்கே குமனவரை இச் சத்தம் கேட்கின்றது. தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கின்ற சக்தி தமிழீழத்தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களுக்கு மட்டுமே உள்ளது என தமிழ் மக்களின அசைக்க முடியாத நம்பிக்கையாகும். சர்வதேசநாடுகளின் தலைவர்கள்இலங்கையின் இனப் பிணக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் மாறாக சர்வதேச சமூகம் மௌனம் சாதிக்குமேயானால் மீண்டும் ஓர் யுத்தம் மூழ்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும்.

எமது நிலைப்பாட்டை இவ் அறிக்கை மூலம் நாகரிகம் உள்ள மனித சமூகத்திற்கு வெளிப்படுத்த விரும்புகின்றோம். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று வழிநடத்தும் தேசித்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தமிழ் மக்களின் இழந்த இறைமையை மீட்டு எடுப்பதற்கான தீர்க்கமான முடிவினை எடுக்கும் நேரம் நெருங்கிவிட்டதாக தமிழ் மக்களாகிய நாங்கள் கருதுகின்றோம். இந்த நெருக்கமான சூழலை சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கின்ற அடுத்த கட்டவரலாற்று நகர்வை நாங்கள் முன்னெடுக்க சர்வதேச நாடுகள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிதமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என தமிழ் மக்களின் பெயரால் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொள்கின்ற

# சந்திரிகாவிற்கே புதிராகவுள்ள அரசியல் எதிர்காலம்...!

**ரங்க கலன்சூரிய (லங்காதீப)**
**தமிழில் வடிவேல்**

'சக்கரவர்த்திகளிடம் மிக நெருக்கமான உறவு வைத்திருப்பது கூடாது என பஞ்சதந்திரக் கதையில் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் அவ்வாறு பெரும் ஆட்சியாளர்களிடம் நட்பு வைத்துத் தற்போது அநாதையாக்கப்பட்டுள்ள இரு அரசியல்வாதிகளை இனம்காண முடிந்துள்ளது. முதலாவதாக எஸ்பி திஸாநாயக்கவைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஊடகத்துறை அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்துள்ள மங்கள சமரவீரவைக் குறிப்பிடலாம். இருவருமே சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்தவர்களாவர்.



அதிலிருந்தவாறே அவ்விருவரும் சந்திரிகாவின் அரசியல் வாழ்வை உயர்ந்த ஸ்தானத்துக்குக் கொண்டு வந்தனர். இவர்கள் இல்லாத பொதுசன ஐக்கிய முன்னணி என்ற ஒரு கட்சி இருந்திருக்கவே முடியாது. இவ்வாறான நிலையில் முதலில் சந்திரிகாவுடன் முரண்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு கட்சியிலிருந்து வெளியேறியவர் எஸ்.பி திஸாநாயக்கவாவார். அவர் வெளியேறி ஐ.தே. கட்சியில் இணைந்து தற்போது சிறைவாசம் அனுபவிக்கின்றார். அவருக்கு பொது மன்னிப்பை வழங்கக் கோரிய போதும் அது சந்திரிகாவைப் பொறுத்தளவில் செவிடன் காதில் ஊதிய சங்கின் கதைபோலாகிவிட்டது.


தற்போது அடுத்த பிரச்சினையாக மங்கள சமரவீர தமது ஊடகத்துறையமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அவரும் சந்திரிகாவிடமிருந்து பிரிந்து செல்ல எடுத்த முதலாவது அடி இதுவோ என எண்ணத் தோன்றியுள்ளது. காரணம் அன்றிருந்த அரசியலில் இருந்து தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் எனலாம். மங்கள சமரவீர மற்றைய இரு அமைச்சுப் பதவிகளையும் தக்கவைத்துக் கொண்டு முக்கியமான ஊடகத்துறை அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளமை சிந்திக்க வைப்பதாக உள்ளது. எனினும் தற்போது அது தர்மசிறி சேனநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சந்திரிகாவைப் பொறுத்தவரை அவர் அரசியலில் முன்னேறியமையானது மங்கள சமரவீரவின் ஊடகத்துறையமைச்சினால் என்றால் அது மிகையாகாது. மங்கள சமரவீர மிக்க சாமர்த்தியவாதியாவார். அவர் பிரேமதாசயுகத்தைப் போன்று ஊடகத்துறையை ஒழுங்காகவும் சரியாகவும் பேணி வந்தார். சந்திரிகா தேர்தலில் வெற்றி பெறக் காரணம் மங்கள சமரவீரவும் அவரது ஊடகத்துறையுமே . ஐ.தே. கட்சியின் பிரச்சாரத்தை அன்று முறியடித்ததும் இவரது ஊடகப் பிரச்சாரமே.

எனினும் இன்று அதே மங்கள சமரவீரவின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்ததும் அவரது சாமர்த்தியமே. எஸ்.பி. திஸாநாயக்க, ஜீ.எல்.பீரிஸ் இல்லாமல் ஐக்கிய தேசியக்கட்சியை தோல்வியுறச் செய்ய முடியாது போனதால் ஜே.வி.பி யினருக்குக் கைகாட்டியமை ஜேவிபி சந்திரிகா மீது கொண்டிருந்த வைராக்கியம் ஆணிவேராகியதை பொருட்படுத்தாமையாகும். அநுராவும் மங்கள சமரவீரவும் இணைந்து ஜே.வி.பி யுடன் கூட்டிணைவது பற்றி நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக ஒப்பந்தம் செய்யப்பட்ட சில மாதங்களின் பின்னரே கூட்டணி தலைமைத்துவத்திலிருந்து சந்திரிகா விலகிக் கொண்டார். இதுவே சந்திரிகாவிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பிரதியுபகாரமாகும். இதனை அண்மையில் தம்மை வற்புறுத்தியதாலேயே தாம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாக சந்திரிகா தெரிவித்திருந்தார்.

எனினும் யார் யார் எந்த அர்த்தத்தைக் கற்பித்த போதும் அரசு மீது மங்கள கொண்டுள்ள அபிப்பிராய பேதமானது ஜே.வி.பி மீது அவருக்கு ஏற்பட்ட பற்றுணர்வாகும். சிலவேளை அது அரசாங்கத்தைப் பாதுகாக்கும் நோக்கமாகவுமிருக்கலாம். அரசாங்கத்தை (ஆட்சியை) பலிக்காடவாக்கி பொதுக்கட்டமைப்பை கைச்சாத்திடுவதிலும் பயனில்லை என்று உணர்ந்திருக்கவும் கூடும்.

எவ்வாறாயினும் சந்திரிகாவுடன் மிக நெருக்கமாக இருந்தும் கூட சந்திரிகாவின் உள்நோக்கத்தை மங்கள சமரவீரவினால் அறிய முடியாமல் போனமை வியப்பானதே. கூட்டணி அரசை ஏற்படுத்திய பின்னரும் ஏனையோரைப் போன்று விமர்சனங்களையும் கேள்விகளையும் எழுப்பவில்லை. கூட்டரசாங்கம் நிரந்தரமாக நீண்டகாலத்துக்குப் பேணப்பட வேண்டி அவர் இரு பகுதியினருக்கும் இடையில் பாலமாகத் திகழ்ந்தார். இதனால் அவர் ஜே.வி.பி யினருடன் அந்நியோன்யமாக நடந்து கொண்டமை சந்திரிகாவுக்குப் பிடிக்காமையே சந்திரிகாவுடன் மங்கள சமரவீர கருத்து மோதலுக்கு முக்கியமானதும் முதலாவதுமான காரணமாகும்.




ஜே.வி.பி யினர் சந்திரிகா பற்றி விமர்சிக்கும் போது தமக்குச் சார்பாகக் கதைப்பதற்கு ஒருவரும் இல்லை என்று சந்திரிகா முன்னர் ஆதங்கப்பட்டமை மங்கள சமரவீரவிடம் சந்திரிகா வைத்திருந்த அவநம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இருந்தது. அத்துடன் ஜே.வி.பி.க்கு ஆதரவான பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களின் தவறுகள் மேலும் உள்ளன. அது ஜே.வி.பிக்குள் உட்பூசல் நிகழலாம் எனக் கருதியமையாகும். எனினும் ஜே.வி.பிக்குள் குறிப்பிடத்தக்கவகையில் உட்பூசல்கள் நிகழவில்லை.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பிக்குள் இருந்த கருத்து மோதல் தற்போது தணிந்து விட்டதாகக் காணப்பட்டாலும் அது எவ்வளவு தூரம் உண்மையெனக் கூறமுடியாது. எனினும் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டால் தான் அடுத்த நிமிடமே அரசாங்கத்தில் இருந்து பிரிந்து விடுவதாக ஜே.வி.பி எச்சரித்துள்ள நிலையில், சந்திரிகா அரசைக் கலைத்துவிடுவாரா அல்லது மகிந்த ராஜபக்ஷ கூறியது போன்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒப்படைப்பாரா என்பது தெரியாது. அல்லது பொதுக்கட்டமைப்பைக் கைவிடுவாரா அதனால் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்பட்டுவிடுமா என்ற சிந்தனையும் கிளம்பியுள்ளது.

ஆயினும் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திடப்படுவது உறுதி என்று தெரிவித்துள்ளார். அவ்வாறு நடைபெறுமாயின் ஜே.வி.பிக்கு அது அரசியல் ரீதியில் நன்மையளிப்பதாகிவிடும். காரணம் இந்த பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை இப்போதே ஜே.வி.பி.யினர் இனவாதப் பிரச்சினையாக்கிக் கொண்டிருப்பதாகும்.

இந்த விவகாரங்கள் முழுவதற்கும் அரசே பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறு அரசு பொறுப்பேற்கும் பட்சத்தில் அதில் ஒரு பகுதி ஜே.வி.பி யினரையும் சேரும். ஜே.வி.பி அரசாங்கத்துள் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்த போதும் ஒரு வருட காலமாக அவர்கள் அரசுக்கோ நாட்டு மக்களுக்கோ நன்மையளிக்கும் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் ஜே.வி.பி யினருக்கு சந்திரிகாவினால் அச்சுறுத்தல் ஒன்று ஏற்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு விவகாரம் அரசாங்கத்துக்குள் ஏற்பட்ட இன்னும் ஒரு சுனாமியாக மாறிவிட்டது. அதற்கு முதல் பலியானவர் என்ற வகையிலேயே தற்போது மங்கள சமரவீரவின் நிலைப் பாடும் உள்ளது.

எனவே எதிர்வரும் வாரங்களில் நாட்டில் இறுதி முடிவு ஒன்று ஏற்படும் நிலை தோன்றியுள்ளது. ஆயினும் என்ன நடக்கும் என்பது நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதிக்கே தெரியாதுள்ளது.

இந்நிலையில் ஐ.தே.கட்சி நடவடிக்கைகள் எவ்வாறிருக்கின்றது என்பதையும் அறியவேண்டியுள்ளது. ஐ.தே.கட்சியினர், சந்திரிகா பொதுக்கட்டமைப்பைக் கைச்சாத்திட விருப்பதையும் பிக்குகள் உண்ணாவிரத மிருப்பதையும் ஹெல உறுமய, ஜே.வி.பி இதற்கு



எதிர்ப்புத் தெரிவிப்பதையும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். ஐ.தே. கட்சியினர் எப்போது பொதுத் தேர்தல் ஒன்று அல்லது சனாதிபதித் தேர்தல் ஒன்று வரும் என எதிர்பார்த்து தவமிருக்கின்றனர். சனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கான பிரச்சார நடவடிக்கையை அடுத்த மாதம் நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர். ஆயினும் அதற்கு முன்பாகவே என்ன நடைபெறப் போகிறது என்பது திகில் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

எவ்வாறாயினும் எதிர்க்கட்சி என்ற வகையிலோ மாற்றுக்கட்சி என்ற வகையிலோ ஐ.தே.கட்சியும் இதுவரை பாரிய நடவடிக்கை எதிலும் இறங்கவில்லை. குறைந்தது கட்சிப் புனரமைப்புப் பணிகளில் கூட அது ஈடுபடவில்லை. இதனால் தேர்தல் ஒன்றை சந்திக்க கட்சி தயாராக உள்ளதா என்பதும் சிந்திக்க வேண்டிய விடயமாகியுள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மைக்குக் காரணம் மங்கள சமரவீர போன்றவர்களா? இல்லாவிட்டால் அனைத்து அரசியல்வாதிகளினதும் பழக்கதோஷமா? என்பதை அறிய முன்பு நாட்டில் மீண்டும் ஒரு அரசியல் மாற்றத்தை விரைவில் அறியக்கூடும் ❋




02.06.2005–08.06.2005

**02.**

398 பலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்தது.



எதியோப்பியாவில் கைது செய்யப்பட்ட எட்டு செய்தியாளர்கள் எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி விடுதலை செய்யப்பட்டனர்.

வடஈராக்கின் டுஸ்குர்மட்டுவில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் ஒன்பது பேர் பலி.




சூடானின் தலைநகர் கார்டுமில் பயணிகள் விமானமொன்று திடீரெனத் தீப்பற்றியதில் ஐந்து பேர் பலி; 16 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கில் பிரிகேடியர்தரத்திலான இராணுவ அதிகாரியொருவர் சுட்டுக்கொலை மரணச்சடங்கொன்றில் கலந்துவிட்டுத் திரும்பும்போதே இவர் சுடப்பட்டார்.


**03.**

அமெரிக்காவின் கலிபோர்னியா கடலோரத்திலுள்ள லகுனாபீச்சில் திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் 18 வீடுகள் இடிந்து விழுந்தன.



இந்தோனேஷியா மற்றும் ஜப்பானில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

தாய்லாந்து பிரதமர் தக்சின்ஷினாவத்ரா ஒரு நாள் பயணமாக இந்தியா சென்றார்.



ஈராக் தலைநகர் பாக்தாத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவங்களில் 24 பேர் பலி.

பொதுவான எல்லை தொடர்பான இறுதி உடன்பாட்டில் சீனாவும் ரஷ்யாவும் கையெழுத்திட்டன.

**04.**

சீனாவின் தெற்குப் பகுதியிலுள்ள ஹீயூனான், சிச்சுவான் கெய்ஷீ ஆகிய மாநிலங்களில் மூன்று நாட்கள் இடைவிடாது பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 200 பேர் பலி;63 பேர் காணாமல் போயுள்ளனர். ஆயிரம் வீடுகள் சேதமடைந்தன.

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதியில் மரப்பலகைகளால் அமைக்கப்பட்ட படகு 50 பேரை ஏற்றிக்கொண்டு புளோரிஸ் தீவை நோக்கிப் புறப்பட்டபோது படகின் இயந்திரம் வெடித்ததில் எட்டு பேர் பலி.

தென்பாக்தாத்தில் ஈராக்கிய அமெரிக்க துருப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் வேட்டையில் தீவிரவாதிகளின் 50 ஆயுதக் களஞ்சியங்கள் கண்டு பிடிக்கப்பட்டதுடன் 108 ஈராக்கியர்களும் கைது செய்யப்பட்டனர்.


ஆயுதங்கள்

செச்சினியாவில் கான்கலா என்னும் இடத்தில் கார்க் குண்டொன்றுவெடித்ததில் ரஷ்ய இராணுவத்தில் ஆறு பேர் காயம்.

**05.**


லெபனானில் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது.

மெக்சிக்கோவின் கஸ்மன்நகரிலுள்ள கோலிமா எரிமலை ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்கு குழம்பைக் கக்கியது.

சுவீடனில் இருந்து 1905ஆம் ஆண்டு நோர்வே தனிநாடாக பிரிந்ததன் நூறாவது ஆண்டு நிறைவுவிழா நோர்வேயில் கொண்டாடப்பட்டது.

**06.**

ஈராக்கில் அமெரிக்க, ஈராக்கிய படையினர் இணைந்து நடத்திய திடீர்த் தாக்குதலில் இரு பொதுமக்கள் பலி.



தென்கிழக்கு நேபாளில் பயணிகள் பஸ் ஒன்றுதீவிரவாதிகளின் கண்ணிவெடியில் சிக்கி வெடித்ததில் 37 பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்ததுடன், 70 பேர் காயமடைந்தனர்.

30 ஆண்டுகளுக்கு முன்னர் வியாட்னாமிய யுத்தகாலத்தில் ஹோஷிமின் நகரில் கைவிடப்பட்டகுண்டொன்று வெடித்ததில் ஒருவர் பலி; ஒருவர் காயம்.

**07.**

பங்களாதேஷ் விமானப்படையைச் சேர்ந்த எப்-07 ரக விமானம் தலைநகர் டாக்காவில் விழுந்து நொருங்கியதில் வீதியில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவர் பலி; மேலும் மூவர் காயம்.

கோவாவில் காங்கிரஸ் கூட்டணி பதவி ஏற்பு .



பாரதிய ஜனதா தலைவர் எல்.கே.அத்வானி பதவியை இராஜினாமாச் செய்தார்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் நான்கு இடங்களிலும் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 18பேர் பலி ; 40 பேர் படுகாயம்.



மேற்குக்கரை மற்றும் காசாவில் இடம்பெற்ற வன்முறைகளின்போது ஐந்து பலஸ்தீனியர்களும் சீனத்தொழிலாளர் ஒருவரும் இஸ்ரேலிய துருப்புக்களினால் சுட்டுக்கொலை.

மேற்குக் கரையில் உள்ள குயா பேட்டியா நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் இஸ்லாமிய ஜிகாத் இயக்க தீவிரவாதப் படையின் தலைவர் மோர் வாக மில் இஸ்ரேலியர்களால் சுட்டுக்கொலை.

நேபாளத்திலுள்ள சிட்வான் மாகாணத்தின் மாஷக் கிராமத்தில் பஸ் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டொன்று வெடித்ததில் 36 பேர் பலி.

# பௌத்தபிக்குகளின் இனவாதத்தால் தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்காது

## -ஜோசப் பரராஜசிங்கம் கருத்து

(மட்டக்களப்பு)

பொதுக்கட்டமைப்பானது அரசியல் ரீதியான ஒரு அமைப்பல்ல அது இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பகிர்வுகளை வழங்குவதற்கான ஒரு அமைப்பு அதனை நிறுவவிடாது பிக்குகள் தடுத்து வருவதிலிருந்து தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நீதி கிடைக்குமா? என்பது சந்தேகமே. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஹெலஉறுமய பிக்குகள் நடத்திய உண்ணாவிரதம், அதனை நிறுத்திக் கொண்டமை தொடர்பாகவும், சனாதிபதி எடுத்த தீர்மானம் தொடர்பாகவும் கருத்துக்கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; 1958ஆம் ஆண்டு பண்டா- செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தார்கள் 1965ஆம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராகக் கோசமிட்டனர். 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தனர். தற்போது சுனாமிப் பொதுக் கட்டமைப்பையும் எதிர்த்து நிற்கின்றனர். எனவே சனாதிபதி தான் கடுமையான நடவடிக்கைகளை கையாள வேண்டிய பொறுப்புள்ளது என்றார்



வவுனியாவடக்கு வாரிக்குட்டியூர் இலுப்பைக்குளம் மக்களின் நலன் கருதி பொது நோக்கு மண்டபம் அண்மையில் திறந்து வைக்கப் பட்டது. மண்டபத்தை வவுனியா வடக்கு பிரதேச செயலர் சுகந்தி நாடாவை வெட்டித் திறந்துவைக்கிறார். படம்:- (அ.லோகீசன்.)

# பொதுமக்களை அச்சுறுத்தி ஆயுதக் குழு பணம் வசூல்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்காப் படைப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுவினர் மக்களை மிரட்டிப் பணம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மக்களின் பணத்தைச் சூறையாடுபவர்கள் தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பண மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு படைத்தரப்பினரே ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக்கும் பொதுமக்கள் இதனால் அச்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# கணவனை கொலை செய்தவருக்கு மரணதண்டனை வழங்கல்

கணவனை அடித்துக் கொலை செய்தது என்று தெரிவித்து மனைவிக்கு வவுனியா மேல்நீதிமன்ற நீதவான் ஜேர்மையா விஸ்வநாதனால் கடந்த வியாழன்று மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

27ஆம்திகதி வைகாசிமாதம் 2000 ஆண்டு வவுனியா கற்குளி என்ற இடத்தில் வைத்துசிவலிங்கம் செல்வராஜாஎன்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டு மலக் குழியினுள் போடப்பட்டிருந்தார். இந்தக்கொலை தொடர்பாக அவரின் மனைவியான சரோஜா செல்வராஜா என்பவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தார். இரண்டாம் எதிரியான இராசதுரை செல்வராஜா என்பவர் இல்லாமல் விசாரணைகள் இடம்பெற்று வந்தது. யூரி இல்லாமல் வவுனியா மாவட்ட மேல்நீதிமன்ற நீதவான் ஜேர்மையா விஸ்வநாதன் மேற்படி விசாரணைகளினை மேற்கொண்டு வந்தார். விசாரணைகள் முடிந்து தீர்ப்பு வழங்கப்பட்டது. தடயங்கள், சாட்சிகள், சான்றுப் பொருட்களின் அடிப்படையில் குற்றம் நிரூபிக்கப்பட்டு இந்தத் தீர்ப்பு அமைந்திருப்பதாகத் தனது தீர்ப்பில் நீதவான் தெரிவித்தார். 15 பக்கங்களைக் கொண்ட இந்தத் தீர்ப்பு வாசிக்கப்பட்டதன் பின்னர் முதலாம் எதிரியான சரோஜா செல்வராஜாவுக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (21)

# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி புதிய கட்டடத் திறப்பு விழா

திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது. கடற்கரைச்சேனை மூதூரில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சிறிகந்தராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் விஜயகுமாரும், திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும், சேனையூர் மகாவித்தியாலய அதிபர் இரட்ணசிங்கமும், விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பனும், கோயில் குருக்கள் செல்வரட்ணமும் கலந்து சிறப்பித்தனர்.

## சனாதிபதியின் முறையற்ற செயல்களால் நாட்டு மக்களுக்குப் பேரபாயம்!

### ஜயலத்ஜெயவர்த்தன குற்றச்சாட்டு

சனாதிபதியின் முறையற்ற நடவடிக்கைகளினால் இன்று நாட்டுமக்கள் பெரும் அபாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகள் நாட்டுமக்கள் மத்தியில் இனவாத உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

நாடு இன்று மிக ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள இன்றைய பதற்ற நிலைக்கு சனாதிபதியே காரணம். இன்று நாட்டுமக்கள் மத்தியில் இனவாத உணர்வுகள் தூண்டப்பட்டு எந்த நிமிடத்திலும் இனக்கலவரம் ஒன்று ஏற்படலாம் என்ற நிலை தோன்றியுள்ளது. சனாதிபதியும் அரசாங்கத்தின் முக்கிய பங்காளியான ஜே.வி.பியும் அரசாங்கத்தினுள் தீர்த்துக் கொள்ளவேண்டிய விடயம் ஒன்றை மக்கள் மத்தியில் கொண்டுவந்து விட்டு இன்று நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்பியுள்ளனர். இவை அனைத்திற்கும் சனாதிபதியே பொறுப்பு. மக்கள் விடுதலை முன்னணியினர் தொடர்ந்தும் இனவாதத்தையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

## அனைவரினதும் கருத்துக்களுக்கு அமைவாக நாட்டை ஆட்சி செய்ய முடியாது

### - சனாதிபதி திட்டவட்டமாக அறிவிப்பு

பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதில் ஒருபோதும் தான் பின்னிற்கப் போவதில்லை என அறிவித்துள்ள சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சகலரினதும் கருத்துக்களைக் கேட்டுக்கொண்டு நாட்டை ஆட்சிசெய்ய முடியாதென்றும், வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் செய்த தேசிய சங்க சம்மேளனத்தின் பொருளாளர் ரஜவத்தே தேரரிடம் தெரிவித்துள்ளார். வெள்ளிக்கிழமை சனாதிபதி மாளிகையில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்திய சனாதிபதி பின்னர் தேசிய சம்மேளனத்தின் பொருளாளர் ரஜவத்தே தேரருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போதே சனாதிபதி மிகக்கடுமையான தொனியில்இதனைத் தெரிவித்ததாக ரஜவத்தே தேரர் கூறினார். மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தி முடித்து ஒருமணித்தியாலத்திற்கு பின்னரே தனக்கு உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது என்றும், அதன்போது சனாதிபதி ஒவ்வொருவர் தெரிவிக்கும் கருத்துக்களை செவிமடுத்துக் கொண்டு நாட்டை ஆட்சி செய்யமுடியாது. அதற்காக மக்கள் எனக்கு ஆணை வழங்கவில்லை. நாட்டையும் மக்களையும் பாதுகாக்கவே என்னைச் சனாதிபதி பதவியில் அமர்த்தினார்கள் என்று கூறினார்.

## குறுகிய அரசியல் இலாபத்திற்காகவே இனவாதிகள் கூச்சலிடுகின்றனர்

### -ஜனநாயக இடது சாரி முன்னணி கருத்து

(கொழும்பு)

குறுகிய அரசியல் இலாபத்தைப் பெறும்நோக்கிலேயே கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியின் ஜே.வி.பி உட்பட ஏனைய இனவாத அமைப்புக்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துவருவதாக ஜனநாயக இடதுசாரி முன்னணி கூறியுள்ளது.

போருக்கு எதிரான தேசிய அமைப்பு பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்து கடந்த வியாழனன்று மஹரகமவிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மற்றத்தில் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறியுள்ளார்.


இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் மழுங்கடிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள போருக்கு எதிரான தேசிய முன்னணி,

சனாதிபதியின் பொதுக்கட்டமைப்புக்கு தாம் பூரண ஆதரவுவழங்கப் போவதாகவும் கூறியுள்ளது.

இந்த மாநாட்டில் மேல்மாகாணசபை உறுப்பினர் றெஜினோல்ட் கூரே உட்படப் பல அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா வீடு செல்லும் தருணம் வந்துவிட்டது!

### - எதிர்க்கட்சித்தலைவர் ரணில்



**(கொழும்பு)**

**சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வீடு செல்ல வேண்டும் என்பது உறுதியாகிவிட்டது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சனாதிபதி தற்போது கூட்டு முன்னணியைப் பாதுகாப்பதிலும், தனது இருப்பைப் பேணுவதிலுமே கவனம் செலுத்துகின்றார். அவர் வீடு செல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது. நவம்பர், டிசம்பர் என காலம் தாழ்த்தாமல் வேண்டுமானால் டிசம்பர் வரைக்குமான சம்பளத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போகட்டும், உடனடியாகத் தேவைப்படும் தேர்தல்களை நடத்தட்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள்; பிரேரணை பாராளுமன்றத்தில் பிற்போடல்

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் தெரிவுக்குழுவால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த பிரேரணை பிற்போடப்பட்டுள்ளது.

இந்தத் தெரிவுக்குழு தொடர்பான பிரேரணைமுன்னறிவித்தல் கடந்த வியாழனன்று பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஐக்கிய தேசியக்கட்சியினர் முன்வைத்த சில திருத்தங்கள் காரணமாக இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சபைக்குத் தலைமை தாங்கிய பிரதித் தவிசாளர்பிரேரணை நிறைவேற்ற முற்பட்டபோது எதிர்க்கட்சி அமைப்பாளர் மகிந்த சமரசிங்க எதிர்க்கட்சி சார்பில் இந்தப்பிரேரணை தொடர்பில் மூன்று திருத்தங்கள் உள்ளதாகவும், அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான இந்தப் பிரேரணையில் வெளிநாடு என்ற பதம் நீக்கப்பட வேண்டுமெனவும், உள்நாடு. வெளிநாடு என்ற பேதமின்றி அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் ஆராயப்பட வேண்டுமெனவும் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

## ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி; ஜே.வி.பி. தயார் என்கிறார் சோமவன்ச

(கொழும்பு)

புதிய கூட்டணி அமைத்து, நாட்டில் புதிய ஆட்சியமைக்க ஜே.வி.பி. தயார் என்றும், ஐ.தே.க. அதற்கு முன்வர வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் ஜே.வி.பி.கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க அழைப்பு விடுத்துள்ளார். காலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜே.வி.பி. பொது கூட்டத்தின் பின்னர் கருத்துக் கூறிய சோமவன்ச தமது கட்சி தேர்தலுக்குத் தயாராகிவிட்டதாகவும், ஐ.தே.க.வுடன் இணைந்து நாட்டில் மிகப் பெரிய வெற்றிபெற்று கூட்டணி அரசு அமைக்க தமது கட்சி திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டு, அரசியல் தற்கொலை யொன்றைப் புரிவதற்கு சனாதிபதி சந்திரிகா முயல்வதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

## பொதுக்கட்டமைப்பு செயற்திட்டம் இரகசிய சதி முயற்சி அல்ல!

### அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் மேற்கொண்டுவரும் செயற்றிட்டம் இரகசியமான சதி முயற்சி அல்ல என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட செயற்றிட்டம் தொடர்பாக நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச சுனாமி நிவாரணச் சபைதொடர்பாக மேலும் மக்களுக்கு அறிவுறுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## காணவில்லை

மூதூரில் இருந்து கிண்ணியா நோக்கி நேற்றுமுன்தினம் மதியம் படகில் சென்று கொண்டிருந்த சிறிலங்காப்பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக படைதரப்பினரால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது..

## ஆயிரம் ரூபா போலித்தாள்கள் ஹட்டன் பிரதேசத்தில் புழக்கம்

ஹட்டன் கொட்டக்கலை பிரதேசத்தில் ஆயிரம் ரூபா சட்டவிரோத பணத்தாள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வங்கி ஒன்றில் வைப்புச் செய்தபோதே இப்பணத்தாள்கள் விடயம் வெளியானது

ஜி131739622 என்ற தொடரிலக்கத்தைக் கொண்ட சட்டவிரோத பணத்தாள்களே புழக்கத்தில் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை அடுத்து பிரதேசத்தில் பல வர்த்தகர்கள் தம்மிடமும் கொடுக்கல் வாங்கல்களின்போது இவ்வாறான பணத்தாள்கள் வந்து சேர்ந்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்

எனினும் இது தொடர்பாக பொலிசாரிடம் முறையிடச்சென்றால் தம்மிடம் பொலிசார். தேவையற்ற விசாரணைகளைச் நடத்துவர் என்ற அச்சத்திலேயே தாம் முறைப்பாடுகளைச் செய்யவில்லை என குறித்த வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (32).

## 20ஆயிரம் றிசேவ் பொலிசாரை நிரந்தரமாக்க கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் 20ஆயிரம் றிசேவ் பொலிசாரை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற நேரஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எஸ். அமரசிங்க இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

நீண்டகாலமாக றிசேவ் பொலிஸ் அதிகாரிகள் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் கடமைபுரிந்து வருவதாகச் சுட்டிக்காட்டிய அவர்,

மிகக்கஷ்டமான நிபந்தனைகளின் கீழ் கடமையாற்றிவரும் இவர்களில் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும்அதிக மானவர்கள் உயரிழந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, 20ஆயிரம் றிசேவ் பொலிஸ் அதிகாரிகளையும் நிரந்தரமாக்குவது அரசாங்கத்தின் கடமையென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

அவர்களுடைய கடமைகளைச் செய்வதற்கு தேவையான அனைத்துத் தேவைகளையும் அரசாங்கம் வழங்க வேண்டுமெனவும் மனோ விஜயரட்ண கூறியுள்ளார்

## இந்தியா–சிறிலங்கா இடையே இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

இந்திய- சிறிலங்கா நாடுகளுக்கிடையிலான ஆறாவது கூட்டம் வெள்ளிக்கிழமை முடிவடைந்தது.இந்த கூட்டத்தின்போது இரு முக்கிய ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கும் இடையே கைச்சாத்தானது.

முதலாவது ஒப்பந்தம் அடிமட்ட நிலையில் அபிவிருத்தி மற்றும் கல்வித் துறை தொடர்பான ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய இந்தியா, சிறிலங்காவில் சிறிய அபிவிருத்தித்திட்டங்களுக்கு 30 இலட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.மற்ற ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே கல்வித்துறையை விஸ்தரிக்க வழி செய்கின்றது.

இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தானதன் பின்னர், அங்கு உரையாற்றிய, இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் 180 கோடி அமெரிக்க டொலர் இலக்கை அடைந்துள்ளது ஒரு பெரு வெற்றி எனத் தெரிவித்தார். (32)

## களனி பல்கலைக்கழக மாணவர்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிராகப் போராட்டம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத்தெரிவித்து களனி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பல்கலைக்கழகத்தின் எட்டு மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப்போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று அப்பல்கலைக்கழக மாணவர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

மேலும் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ள தமது மாணவர் சங்கம் தயங்காது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

# கடந்த நான்கு நாட்களில் எனக்கு எதிர்பாராத அனுபவம் கிடைத்தது

## -பா.ஜ. தலைவர் அத்வானி

**கடந்த நான்கு நாட்களில் எனக்கு எதிர்பாராத அனுபவம் கிடைத்தது அதன் மூலம் வாழ்க்கையில் நல்ல பாடம் படித்துவிட்டேன் என்று மீண்டும் கட்சி அலுவலகம் சென்ற பா.ஜ.க. தலைவர் அத்வானி கூறினார்.**

பாகிஸ்தான் நிறுவனர் ஜின்னாவை மதசார்பற்றவர் என்று கூறியதால் எழுந்த பிரச்சினையில் பா.ஜ. தலைவர் பதவியை அத்வானி இராஜினமா செய்தார்.

அத்வானியின் பாகிஸ்தான் பயணத்தை விளக்கி பா.ஜ ஆட்சி மன்றக்குழு தீர்மானம் நிறைவேற்றியதை தொடர்ந்து இராஜினாமாவை அத்வானி வாபஸ் பெற்றார்.

இராஜினாமாவை வாபஸ் பெற்ற பிறகு அத்வானி நேற்று முன்தினம் டில்லியில் உள்ள பா.ஜ தலைமை அலுவலகத்துக்கு மீண்டும் சென்று தனது பணிகளை தொடங்கினார். பா.ஜ. அலுவலகம் வந்த அவரை அங்கு இருந்த நிர்வாகிகள், தொண்டர்கள் வரவேற்றனர். அத்வானிக்கு மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

அப்போது அங்கு திரண்டு இருந்த நிர்வாகிகள் மத்தியில் அத்வானி பேசியதாவது;

எனது பாகிஸ்தான் பயணத்திலும் இந்தியா திரும்பிய பின் கடந்த நான்கு நாட்களாக நடந்த சம்பவங்களிலும் நான் ஏராளமான பாடம் படித்து விட்டேன். எனக்கு எதிர்பாராத அசாதாரண அனுபவங்கள் கிடைத்தன. மனிதன் வாழ்க்கை முழுவதும் பாடம் படித்துக் கொண்டு தான் இருக்கிறான் அதில் எதிர் பாராத அசாதாரண அனுபவங்கள் கிடைக்கும் அப்படிப்பட்ட அனுபவங்கள் இந்த 15 நாட்களில் எனக்கு கிடைத்தன. இந்த அனுபவங்கள் எதிர்காலத்தில் எனது கடமைகளை ஆற்ற கைகொடுககும் என்று நம்புகிறேன் என்றார்.



இராஜினாமாவை வாபஸ் பெற்ற பின் டில்லியில் உள்ள பா.ஜ. தலைமை அலுவலகம் சென்ற பா.ஜ. தலைவர் அத்வானிக்கு பாராட்டு விழா நடந்தது அருகில் துணைத்தலைவர் வெங்கையா நாயுடு செய்தித் தொடர்பாளர் முக்தார் அப்பாஸ் நக்வி ஆகியோர் உள்ளனர்.

## தேவகௌடாவுக்கு அறுவைச் சிகிச்சை


முன்னாள் இந்தியப் பிரதமர் தேவகௌடாவுக்கு வலது முழங்காலில் நேற்று முன்தினம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

பெங்களூரிலுள்ள சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தேவகௌடா தறபோது நலமாக இருப்பதாகவும் விரைவில் அவர் வீட்டிற்கு செல்லலாம் என்றும் அவரின் மதசார்பற்ற ஜனதாதளம் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# மும்பை குண்டுவெடிப்பு பொடோ கைதிகள் விடுதலை

மும்பை பஸ் நிலைய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பொடோ சட்டத்தின் கீழ் கைதான எட்டு பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

மும்பை காட்கோபர் பஸ் நிலையத்தில் 2002ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் ஆம் திகதி குண்டு வெடித்தது. அதில் இரண்டு பேர் பலியாகி; 49 பேர் காயமுற்றனர். இந்த வழக்கில் எட்டு பேர் பொடோசட்டத்தின் படி கைதானார்கள் இந்த வழக்கை விசாரித்து வந்த பொடோ சிறப்பு நீதிமன்றம் மேற்படி வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறியது. குற்றத்திற்கான ஆதாரம் கிடைக்கவில்லை என்பதால் சந்தேகத்துக்கான பலன் குற்றம் சாட்டப்பட்டவர்களையே சேரும் என்ற அடிப்படையில் எட்டு பேரையும் நிரபராதிகள் என்று நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியது.



இந்திய உத்தர பிரதேச மாநிலம் விருந்தாவன் நகரில் இளம் பெண்களின் தற்காப்புக்காக அவர்களுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கப்படுவதை காணலாம்.

# பா.ஜ. தேசிய நிர்வாகிகள் கூட்டம் அடுத்த மாதம் தமிழகத்தில்

தமிழ் நாட்டில் பா.ஜ தேசிய நிர்வாகிகள் கூட்டம் அடுத்த மாதம் நடைபெறும், என்று கட்சி செய்தித் தொடர்பாளர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

டில்லியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் சுஷ்மா கூறியதாவது;

பா.ஜ தலைவர் அத்வானி தலைமையில் கட்சி நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. அடுத்த ஆண்டு தமிழகம், கேரளா, புதுச்சேரி, மேற்குவங்கம் , அசாம் போன்ற மாநிலங்களில் தேர்தல் நடக்கிறது. அந்த மாநிலத்தின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்த மாநிலங்களில் பா.ஜ நிச்சயம் வலுப்பெறும். இந்த மாநிலங்களில் எந்தக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்வது என்று கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை. அந்த முடிவு பா.ஜ ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.



நேற்று முன் தினம் தமிழகம் மாமல்லபுரம் அருகே பஸ் மீது மோதிய கார்நொருங்கி கிடப்பதை படத்தில் காணலாம். இவ்விபத்தில் இருவர் கொல்லப் பட்டனர்.

# நாய் வளர்ப்போர் அனுமதி பெற வேண்டும்

## -கேரளாவில் புதிய சட்டம்

நாய் வளர்க்கிறீர்களா....? வளர்த்துக் கொள்ளுங்கள் அது உங்கள் விரும்பம். ஆனால், கண்டிப்பாக அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் சிறையில் தள்ளி விடுவோம் என்று கேரள திருவனந்தபுரம் மாநகராட்சி எச்சரித்துள்ளது.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நாய்கடிக்குப்பலர் ஆளாகி வருகின்றனர். ரேபிஸ் நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மாநகராட்சி நிர்வாகம் தற்போது கடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இது குறித்து திருவனந்தபுரம் மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது;

ரேபிஸ் கிருமிகளால் அபாயம் அதிகமாகிக் கொண்டே இருப்பதை தடுக்க நாய் வளர்ப்பவர்கள் மாநகராட்சியின் அனுமதி பெற்று நாய் வளர்க்க வேண்டும். அனுமதி இல்லாமல் யாராவது நாய் வளர்ப்பது தெரிந்தால் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும். அல்லது அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்குச் சிறைத்தண்டனையும் கிடைக்குமென அறிவித்துள்ளது.

### தேர்தல் ஆணையகம் விசாரணை

தமிழ் நாட்டில் ஒரே நாளில் 12 இலட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்ட பிரச்சினை விசுவரூபம் எடுத்துள்ளது.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை ஆகிய மாநகராட்சிகள் நீங்கலாக தமிழ் நாடு முழுவதும் 165 சட்ட சபை தொகுதியில் கடந்த மாதம் புதிய வாக்காளர் சேர்க்கும் பணி நடந்தது. அப்போது 17 இலட்சம் புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். இதில் 12 இலட்சம் வாக்காளர்கள் கடைசி நாளான மே 31 ஆம் திகதி சேர்க்கப்பட்டார்கள். ஒரே நாளில் இலட்சக்கணக்கில் வாக்காளர்களை சேர்த்தது தேர்தல் அதிகாரிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையத்தால் பல்வேறு தரப்புக்களிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது.



ஜம்மு - காஷ்மீரில் இந்தியப் படை அதிகாரிகளை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்த போது

# அப்துல்கலாம்-மன்மோகன்சிங் 30 நிமிடங்கள் கலந்துரையாடல்

இந்திய சனாதிபதி அப்துல் கலாமை பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்து 30 நிமிடங்கள் முக்கிய ஆலோசனை நடத்தினார்.

இந்திய சனாதிபதி அப்துல் கலாம் ரஷ்யா,சுவிற்சர்லாந்து, ஐஸ்லாந்து, உக்ரைன் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு டில்லி திரும்பினார். அந்த நாட்டுத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார். ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

பிரதமர் மன்மோகன்சிங் கடந்த வியாழக்கிழமை சனாதிபதி மாளிகைக்குச் சென்று சனாதிபதி அப்துல் கலாமைச் சந்தித்து 30 நிமிடங்கள் பேசினார். அப்போது சனாதிபதி கலாம் தாம் சுற்றுப்பயணம் மேற் கொண்ட நாடுகளின் தலைவர்கள், தொழிலதிபர்கள், விஞ்ஞானிகள், மேதைகள், மாணவர்களுடன் விவாதித்த விடயங்களை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் விளக்கினார்.

அந்த நாடுகளின் தலைவர்களுடன் சனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தை காரணமாக ஒவ்வொரு அமைச்சகமும் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றியும் அப்துல்கலாமும், மன்மோகன்சிங்கும் விவாதித்தார்கள் மேற்கண்ட தகவல் சனாதிபதி மாளிகை செய்தி குறிப்பில் வெளியாகியுள்ளது.

# எலிசபெத் பிறந்த நாளில் 22 இந்தியர்களுக்கு விருது

ராணி எலிசபெத் பிறந்த நாளை முன்னிட்டு 22 இந்தியர்களுக்கு விருது வழங்கப்படவுள்ளது.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு துறைகளில் விளங்குவோருக்கு விருதுகள் வழங்கப்படுவது வழக்கம். ராணி எலிசபெத்தின் இந்த வருட பிறந்தநாளை முன்னிட்டு விருது பெறுவோரின் பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதில் இங்கிலாந்தில் வசிக்கும் 22 வெளிநாட்டு வாழ் இந்தியருக்கு விருது அறிவிக்கப்பட்டிருக்கிறது. தொழிலதிபர் ரமி ராஞ்சர், கல்வியாளர் பிரிட்பால் சிங் உள்ளிட்ட 22 பேர் விருதுக்கு தேர்வு செய்யபட்டுள்ளனர்.

# இங்கிலாந்து அணிக்கு 153 ஓட்ட வெற்றி



எதிர்வரும் 19ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் பங்குகொள்ளும் நட்வெஸ்ட் கிண்ண முக்கோண கிரிக்கெட் தொடருக்கு முன் இங்கிலாந்து ஹம்ஸயர் அணிகள் பங்கு கொண்ட நல்லெண்ணப் போட்டியொன்றில் இங்கிலாந்து அணி 153 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

50 ஓவர் கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியின் அன்ரு ஸ்ரோஸ், கெவின் பீற்றர்சன் இருவரும் சிறப்பாக ஆடி முறையே 77, 85 என்ற ஓட்டங்களைப் பெற்று அணி 238 ஓட்டங்களைப் பெற உதவினர்.

பதிலுக்கு 239 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய ஹம்சயர் அணி சைமன் ஜோன்ஸ், டரன் கோ ஆகியோரின் பந்து வீச்சில் ஓட்டம் பெறமுடியாது திணறியது. அவ்வணிக்காக ஆடும் நியூசிலாந்தின் கிறேக் மக்மிலன், ஜோன் கிறௌலி, கிறிஸ் பென்ஹாம் ஆகியோர் ஓட்டம் பெறாமலும், ஆரம்ப வீரர் கிறேக் லாம்ப் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஷேன் உடேல் பத்துப் பந்தைச் சந்தித்து நான்கு பவுண்டரிகளை விளாசினார். விக்ரம் சோலங்கி கொலிங்வூட்டின் பந்து வீச்சில் எல்.பி. முறையில் ஆட்டமிழந்தார். ஆரம்பத்தில் பத்து ஓட்டங்களுக்குள் மூன்று விக்கெட்டுக்களையிழந்த அவ்வணி 85 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

நட்வெஸ்ட் தொடர் வரும் வியாழனன்று இங்கிலாந்து பங்களாதேஷ் அணிகள் மோதும் போட்டியுடன் ஆரம்பமாகும். அதற்கு முன்பாக இன்று இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியுடன் 20 ஓவர் கொண்ட போட்டியில் மோதுகின்றது.

இதேவேளை, இங்கிலாந்து சென்றிருக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் லீசெஸ்டர் சயர் அணிக்குமிடையில் நடைபெற்ற 50 ஓவர் கொண்ட போட்டியில் அவுஸ்திரேலிய அணி 95 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் நான்கு விக்கெட் இழப்புக்கு 321 ஓட்டங்களைக் குவித்தது. ஹெய்டன், மார்ட்டின், சைமன்ஸ் மூவரும் முறையே 107, 85, 92 என்ற ஓட்டங்களைப் பெற்றனர். பொண்டிங் ஏழு ஓட்டங்களுடனும், கில்கிறிட்ஸ் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

லீசெஸ்டர்சயர் அணி சார்பில் பந்து வீசிய கிப்ஸன் இரு விக்கெட்டுக்களையும், மடி, மாஸ்டர்ஸ் ஆகிய இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குஆடியலீசெஸ்டர் சயர் அணி 50 ஓவர்கள் முடிவில் எட்டு விக்கெட்டுக்களையிழந்து 226 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அவ்வணி சார்பில் நிக்சன், கிப்சன் இருவரும் முறையே 43, 50 என்ற ஓட்டங்களைப் பெற்றனர். இந்திய வீரர் தினேஷ் மொங்கியா 21 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ஹோகாட் மூன்று விக்கெட்டுக்களையும், மெக்ராத் இரு விக்கெட்டுக்களையும், கிளெஸ்பி, பிரெட்லீ இருவரும் ஒவ்வொரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.



# ஆஷஸ் தொடரில் வெல்வதற்கு கர்வம் கொள்ள வேண்டும்

**டேரன் கவ்**

ஆஷஸ் தொடரில் வெல்ல அவுஸ்திரேலியாவை போல கர்வம் கொள்ள வேண்டும் என்கிறார் இங்கிலாந்தின் டேரன் கவ்.

இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடர் வரும் ஜுலை 21இல் தொடங்குகிறது. கடந்த எட்டுத் தொடர்களில் தோற்ற இங்கிலாந்து, இம்முறை சாதிக்க காத்திருக்கிறது. இதற்கு அணியின் வேகப்பந்து வீச்சாளரான டேரன் கவ் கூறும் யோசனைகள்.

20 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஷஸ் தொடரைக் கைப்பற்ற வேண்டுமானால், அவுஸ்திரேலிய அணியின் மன நிலையை இங்கிலாந்து வீரர்களும் பின்பற்ற வேண்டும். அவர்களைப் போல சில நேரங்களில் கர்வம் கொள்ள வேண்டும். தோல்வியின் விளிம்பில் இருந்தாலும் நம்பிக்கையை இழக்கக்கூடாது. 1999இல் சிட்னியில் நடந்த டெஸ்ட்டில் நான் விக்கெட் எதுவும் வீழ்த்தாமல் 60 ஓட்டம் கொடுத்திருந்தேன். அப்போதும் நம்பிக்கையுடன் தொடர்ந்து பந்து வீசி ஹாட்ரிக் சாதனை நிகழ்த்தினேன்.

டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்பது அவுஸ்திரேலியாவுக்குச் சாதகம் என்கிறார்கள். இது முற்றிலும் தவறான கணிப்பு. ஏனென்றால், ஒரு நாள், டெஸ்ட் போட்டிக்கு இடையே நிறைய வித்தியாசம் உண்டு. ஒரு நாள் போட்டியில் யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம். டெஸ்ட் போட்டிகளில் அப்படி அல்ல. ஐந்து நாட்கள் போராடினால் தான் வெற்றி வசப்படும். சமீபத்தில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணி சிறப்பாக செயற்பட்டுள்ளது. இதேபோல் ஆஷஸ் தொடரையும் கைப்பற்றினால் அணியின் வீரர்கள் கதாநாயகர்களாக உலாவரலாம். இவ்வாறு டேரன் கவ் யோசனை கூறினார்.




35 வயதான கவ் மூட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டார். தற்போது ஒரு நாள் போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார்.

# சர்வானுக்கு பதில் கங்குலி



சுனாமிப் போட்டிக்கான எம்.சி.சி. அணியில் சர்வானுக்குப் பதிலாக கங்குலி இடம் பெறுவார் எனத் தெரிகிறது. சுனாமி நிவாரண நிதி திரட்டுவதற்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் வரும் 14 இல் நடக்கவுள்ளது. இதில் எம்.சி.சி., 11 பேர், உலக 11 பேர் அணிகள் மோதுகின்றன. எம்.சி.சி., அணியில் இடம் பெற்றிருந்த மேற்கிந்தியத்தீவு அணியின் சர்வானுக்கு பயண ஏற்பாட்டில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இவருக்குப் பதிலாக சவுரவ் கங்குலிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது இது குறித்து கங்குலி கூறுகையில்; "சுனாமிப் போட்டியில் பங்கேற்க அழைப்பு வந்துள்ளது. 14 ஆம் திகதி வேறெந்த போட்டிகளும் இல்லாத பட்சத்தில் பங்கேற்க வாய்ப்புள்ளது," என்றார். ஏற்கனவே நட்சத்திர வீரர் சச்சின் முழங்கை சிகிச்சை செய்துள்ளதால் விலகிக் கொண்டார். இவரக்குப் பதிலாக லட்சுமன் இடம் பெற்றுள்ளார். தவிர அனில் கும்ளேயும் அணியில் உள்ளார்.

# இறுதிப் போட்டியில் பெடரர்



ஜேர்மனியில் ஹாலே ஒபன் டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் அரைஇறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர், டோமிஹாசுடன் மோதினார்.

இதில் பெடரர் 6-4, 7-6 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றார். மற்றொரு அரையிறுதியில் ரஷ்ய வீரர் சபீன், கனாஸை 6-3, 4-6, 6-2 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.



வரும் 2006 ஜுன் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் முதலாவது போட்டி இடம்பெறும் ஜேர்மனியின் மியுனிச் நகர மைதானத்தை அவதானிக்கும் உலகக் கால்பந்தாட்ட சபைத் தலைவரும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்குப் பொறுப்பான தலைவரும்.

விளையாட்டு

# இறுதிப் போட்டியில் சரபோவா



பர்மிங்காமில் நடைபெறும் டி.எவ்.எஸ். கிண்ண டென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் பங்கேற்க ரஷ்யாவின் மரியா சரபோவா தகுதி பெற்றுள்ளார். முன்னதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் அவர் பிரான்ஸின் டட்டியனா கலோவினை 7-5, 6-1 என்ற செட் கணக்கில் வென்றுள்ளார்.


இறுதிப் போட்டியில் சரபோவா செர்பிய வீராங்கனையான யங் கோவிக்கை எதிர்த்து ஆடுகின்றார்.

அண்மைக் காலமாக வீழ்ச்சியுற்று காணப்பட்ட தனது ஆட்டம் தற்போது பழைய நிலைக்குத் திரும்பியுள்ளதால் பெரிதும் மகிழ்ச்சியளிப்பதாக அவர் தெரிவிக்கின்றார்.




தெற்கு பிரான்சிலுள்ள டோலான் நகரில் நடந்த 21 வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்து இறுதிப் போட்டியில் பிரான்ஸ் 4-0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கலை வீழ்த்தியது. சம்பியன் கோப்பையுடன் பிரான்ஸ் அணி வீரர்கள்.

# அதிபார குத்துச் சண்டைப் போட்டி மைக் டைசன் அதிர்ச்சித் தோல்வி



வோஷிங்டனில் நடந்த குத்துச் சண்டைப் போட்டியில் முன்னாள் சம்பியன் மைக்டைசன் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த கெவின் மெக்பிரைட்டை எதிர்த்து மோதினார். இதில் ஆறாவது சுற்றில் கெவின் மெக்பிரைட் டைசனை வீழ்த்தினார். இப்போட்டிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டைசன் குத்துச் சண்டையில் இனித் தன்னால் சாதிக்க முடியாது எனவும் இதனால் நான் ஓய்வு பெறுகிறேன் எனவும் தெரிவித்தார்.



மொஸ்கோவில் "ஐரோப்பிய ரிதமிக் ஜிம்னாஜ்ரிக் சம்பியன் ஷிப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் ஈஸ்டோனியா வீராங்கனை மரிய பிலிப் போவா தனது உடலை வில்லாக வளைத்து பார்வையாளர்களை அசத்தினார்.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் கனகபுரம் விளையாட்டுக்கழகம் நடாத்தும் அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான கிரிக்கெட் (மென்பந்து துடுப்பாட்டம்) இன்று காலை கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன. போட்டிகள் தொடர்ந்து நடைபெறும் எனவும், ஏனைய போட்டிகள் எதிர்வரும் தினங்களில் இதே மைதானத்தில் நடைபெறும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## சிந்தனைக்கு

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்து விட்டால், ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

# தார்மீக பலம் தேவை!

கண்டியில் சாகும்வரை உண்ணா நோன்பிருந்து வந்த ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினரான ஒமல்பே சோபித்த தேரர் தனது உண்ணா நோன்பினைக் கைவிட்டமையானது ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல. ஏனெனில் உண்ணா நோன்பிருந்து உயிரை நீத்தல் என்பது சாதாரண விடயமல்ல. அதற்கு மிக உயர்ந்த அர்ப்பணிப்புத் தேவையாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மகாநாயாக்கர்கள் சந்திப்பு இடம் பெற்றதை அடுத்து அதாவது சனாதிபதி மகாநாயக்கர்களுக்கு பொதுக்கட்டமைப்புக் குறித்து வழங்கிய வாக்குறுதி உண்ணா நோன்பிருந்த சோபித்ததேரருக்குத் தெரிவிக்கப்பட்டதன் பின்னர்- அவர் உண்ணா நோன்பைக் கைவிட்டார் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஆனால், சனாதிபதி மகாநாயக்கர்களுக்கு வழங்கிய வாக்குறுதியினையோ அன்றி வேறு ஏதாவதொரு காரணத்தைக் கொண்டோ சோபித்ததேரரின் உண்ணாவிரதம் கைவிடப்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டதொன்றே. ஏனெனில், சோபித்த தேரர் அபிலாசைகளைக் கொண்ட மனிதன். அவரால் சாகும்வரை உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டுவிட முடியாது.

சாகும்வரை உண்ணா நோன்பிருத்தல் என்பதும்- இறுதி வரை போராடி உயிரை விடுதல் என்பதற்கும் ஓர் உறுதியான குறிக்கோள் இலட்சியம் இருந்தால் மட்டும் போதாது. அது தார்மீக ரீதியிலான பலம் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு, இப் போராட்டத்தில் தன்னைத்தானே அர்ப்பணிக்கத்தக்கவர்கள் அபிலாசைகள் அற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இந்நிலையினை அமைச்சர் டி.எம் ஜெயரட்ணவும் கூட சுட்டிக்காட்டத்தவறவில்லை. இலங்கையில் "சில குறிக்கோள்களுக்காக சாகும்வரை உண்ணா நோன்பிருந்து இறுதி வரை அதற்காகவே தனது உயிரை நீத்தவர் ஒருவரே அவர் திலீபன் மட்டும்தான். இப்போது உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள பிக்குமாரும் அதைப் போல் தியாகங்களைச் செய்தால் அவர்களை நாம் வரலாற்றில் பதிவு செய்வோம் எனத் தெரிவித்திருந்தார்.

டி.எம். ஜெயரட்ண, பிக்குமார் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்விடப் போவதில்லை என வெளிப்படையாகக் கூறவில்லையாயினும் அவர்கள் உயிர்விடப் போவதில்லை என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருந்தார் என்பதே அவரின் கூற்றுக்களின் அர்த்தமாகும். அவ்வாறு டி.எம் ஜெயரட்ணகூட முடிவுக்கு வருகின்றமைக்குக்காரணம் இல்லாமல் இல்லை.

ஏனெனில் பௌத்த பிக்குகளின் போராட்டமானது ஒரு குறிக்கோள், கொள்கை என்பனவற்றைக் கொண்டவையாக இருப்பினும் அவற்றிற்குத் தார்மீக ரீதியிலான பலம் இல்லை. அதாவது தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படுதல் கூடாது. அவர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படுதல் கூடாது என்பது அவர்களின் கொள்கைகளாகவும், குறிக்கோளாகவும் இருக்கலாம். ஆனால் அவை தார்மீக பலம்கொண்டவையாக இல்லை.

அதாவது நியாயப்பாடு கொண்டவையாகவோ பிறரால் அனுதாபம் தெரிவிக்கப்படக் கூடியதாகவோ இல்லை. இந்நிலையில் எவ்வாறு இப் போராட்டம் நியாயப்பாடானதாக இருக்க முடியும்? ஆகையினால், நியாயப்பாடற்ற போராட்டத்தை எவ்வாறு அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள முடியும்?

அடுத்ததாக உண்ணா நோன்பிருந்து உயிர்விடுதல் என்ற மகத்தான தியாகத்தைச் செய்வதற்குப் பெரும் அர்ப்பணிப்புத் தேவை. அதுமட்டுமல்ல அனைத்தையும் துறக்கும் பெரும் மனமும் தேவை. விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்ட நிலை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். ஆனால், சிறிலங்காவிலுள்ள பிக்குகள் -குறிப்பாக ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் அவ்வாறானவர்கள் இல்லை.

ஏனெனில் அவர்கள் துறவிகள் என்ற பெயருடன் இருப்பினும் அதிகார அபிலாசை கொண்டவர்களாக ஆட்சியில் பங்கேற்க விருப்பம் கொண்டவர்களாக ஏனையோரின் உரிமைகளை மதியாதோர்களாக சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பகிர்ந்தளிப்பதற்கு முட்டுக்கட்டை போடுபவர்களாகவும், அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த விளைபவர்களாகவும் உள்ளனர்.

இந்நிலையில் இவர்கள் எவ்வாறு தமது உயிரைத்தியாகம் செய்ய முடியும்? பாராளுமன்ற ஆசனங்களுக்குப் போட்டியிட்டு - அதிகாரத்தில் பங்கேற்கத் தயாரகவுள்ள அந்த நிலையிலும் சிறுபான்மை மக்களின் உரிமைக்கான போராட்டங்களை இராணுவ ரீதியில் அடக்கி ஆள வேண்டும் என்ற அதிகார வெறியும், அபிலாசையும் கொண்ட இவர்கள் எவ்வாறு அனைத்தையும் துறந்து உயிரை விட முடியும்? மேலும் இவர்கள் நடத்தும் போராட்டத்திற்கு எந்த வகையில் தார்மீக பலம் உருவாக முடியும்? ஏனையோரை அழித்தொழிப்பதற்கும் மற்றையோர் மீது அதிகாரம் செலுத்துவதற்கும் முற்படுபவர்களின் போராட்டங்கள் எவ்வாறு தார்மீக ரீதியானவையாக,தார்மீகப் பலம் பெற்றவையாக இருக்க முடியும்?

# அகிம்சை போராட்டத்திற்கு தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டத்தை மாற்று வழியில் தொடர்வோம்

## -திருமலை வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம்

(திருகோணமலை)

பல தடவைகள் அகிம்சைப் போராட்டங்கள் நடாத்தப்பட்டும் எவ்வித முடிவும் கிட்டாத நிலையில் மக்கள் இப்போது விரக்தி அடைந்த நிலையிலுள்ளனர். இந்நிலைக்கு மிக விரைவான தீர்வு. கிடைக்காத விடத்து நாம் சுயமாக எம்மை நாமே தீர்மானிக்கும் பொருட்டு அந்த உரிமைக்கான போராட்டத்தை மாற்று வழியில் தொடர்வோம். எனவே அப்படியான ஆயுதப் போருக்குள் மீளவும் எம்மைத் தள்ளியமைக்கு சிறிலங்கா அரச படைகளே பொறுப்பு என்பதை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

இவ்வாறு திருகோணமலை பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தொடரும் போரினால் பல வடுக்களைச் சுமந்தும் சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடைகளால் [illegible] போய் இருந்த இந்தப் [illegible] தமிழீழ விடுதலைப் [illegible]களுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் ஓரளவு தடைகள் நீக்கப்பட்டு மக்களின் அன்றாடத் தேவைகளும், ஏனைய தேவைகளும் ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யப்படும் நிலைமை இருந்தது.

ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் இந்த வேளையில் கூட இப்பகுதி மக்களை சிறிலங்கா அரசாங்கம் பல்வேறு பொருளாதாரத் தடைகளால் மீளவும் பழைய நிலைக்கே கொண்டுபோய் விட்டுள்ளது. உலக மக்கள் யாவருமே சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களை மனிதாபிமான முகத்துடன் உற்றுநோக்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அந்த மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்கும் பொருட்டு உதவி வழங்கும் நிறுவனங்களால் கொண்டு செல்லப்படும் கட்டட நிர்மாணப் பொருட்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றது. இதனால் அந்த மக்கள் இப்போதும் கூடாரங்களில் வாழும் அவல வாழ்வு தொடர்கின்றது.

இதன் மூலம் புரிவது என்ன? பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டால் அது தமிழர்களுக்கு வட-கிழக்கை வழங்குவதற்கு ஒப்பாகி விடும் என சிறிலங்கா இனவாதிகள் கூக்குரலிடுகின்றனர். ஆனால் இப்படியான தடைகள் போடுவதன் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்பது தமது ஆளுகைக்கு உட்படாத தனியான ஆட்சிப் பிரிவு என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாகவே அர்த்தம் கொள்ளப்படுகின்றது என வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# இலங்கைக்கு இந்தியா ராடர் வசதி; கண்டித்து பிரதமருக்கு வைகோ கடிதம்

(சென்னை)

இலங்கைக்கு நவீன ராடர்களை வழங்க இந்தியா தீர்மானித்திருப்பதற்கு கண்டனம் தெரிவித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் இலங்கைக்கு அதிநவீன ராடர்களை வழங்க இந்தியா ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே இலங்கைக்கு ராடர் சாதனங்களையும், ஆயுதங்களையும் வழங்கக்கூடாது என வலியுறுத்தி வைகோ பிரதமர் மன் மோகன் சிங்கிற்கு கடிதமொன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைக்கு நவீன ராடர்கள் மற்றும் ஆயுத தளபாடங்களை வழங்கத் தீர்மானித்திருப்பதாக கொழும்பில் வைத்து இந்திய வெளியிறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் கூறியதையறிந்து நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்குவதாக இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டால் இது இந்தியா எடுக்கும் மிக மோசமான நடவடிக்கையாக இருக்கும்.

கடந்த 1995 ஆம் ஆண்டு மற்றும் 1998 ஆம் ஆண்டில் இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சில் ஏராளமான அப்பாவித் தமிழ்மக்கள் இறந்துள்ளனர். இந்த சூழ்நிலையில் இந்தியா இலங்கைக்கு ஆயுதங்களை வழங்க முனைந்தால் அது இலங்கையிலுள்ள அப்பாவித் தமிழர்களுக்கு மிகப்பெரிய இன்னல்களை விளைவிக்கும்.

எனவே இருநாட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவிகள் வழங்கினால் அது உலக வாழ்தமிழ் மக்கள் அனைவருக்கும் பெரும் வேதனையை அளிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சுதந்திர முன்னணியின் கூட்டு உடன்பாட்டை சனாதிபதி சந்திரிகா மீறிச்செயற்படுகின்றார்

## -ஜே.வி.பி.கடும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுதந்திர முன்னணி அமைக்கப்பட்ட நாளிலிருந்து கூட்டு உடன்படிக்கையின் கட்டுப்பாடுகளை சந்திரிகா மீறிச் செயற்படுவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்று முன்தினம் சந்திரிகாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதும் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும், கூட்டு ஒப்பந்தத்தினையும் மீறி அரச தலைவர் சந்திரிகா செயற்படுவதும் இது முதல் தடவை அல்ல என கடுமையான தொனியில் சந்திரிகாவிற்கு ஜே.வி.பி எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இன்று நாட்டின் இறைமையையும், அரசியலமைப்பையும் மதிக்காது பொதுக்கட்டமைப்பினை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்திக் கொள்வதை அனுமதிக்க முடியாது எனக் குறிப்பிட்டிருக்கிறார். "சுனாமி நிவாரணசபை அமைக்கப்படுவது தொடர்பில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு" என்ற தலைப்பில் நான்கு பக்க கடிதமொன்று சந்திரிகாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதை எதிர்ப்பதற்கான 11 காரணங்களும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அன்று ஐக்கிய தேசிய முன்னணியின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்தினை நீங்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் எதிர்த்தது மட்டுமல்லாது எதிர்ப்பு நடவடிக்கைகளையும் நாம் இணைந்து மேற்கொண்டோம் என்பதை இத்தருணத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்தும் உங்கள் யோசனைகள் தொடர்பாக கடிதங்கள் எழுதினோம், பேச்சு நடத்தினோம். அப்போது ஜே.வி.பி.யுடன் பேச்சு நடத்தித்தான் முடிவெடுக்கப்படுமென உத்தரவாதம் அளித்திருந்தீர்கள். பொதுக்கட்டமைப்பின் முழு உள்ளடக்கத்தினையும் எங்களுக்கு தெரிவிக்கவில்லை, நாட்டு மக்களுக்கும் பகிரங்கப்படுத்தவில்லை.

அரச நிறுவனங்களை தனியார் மயமாக்க முனைந்தபோது கடிதங்கள் அனுப்பி அதனைத்தடுத்து நிறுத்தினோம். முன்னணி பாதுகாக்கப்பட வேண்டுமென்றே இதுவரை காலமும் செயற்பட்டோம். நீங்கள் தற்போது புதிய அரசியல் தவறை தெரிந்து கொண்டே செய்ய முயற்சிக்கின்றீர்கள். இதற்கு இடமளிக்க முடியாது. பொதுக்கட்டமைப்பு யோசனை முழுமையாக 15 ஆம் திகதிக்குள் வாபஸ் பெறாவிட்டால் 16ஆம் திகதி அரசை விட்டு வெளியேறுவோம் என்றும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி. எதிர்ப்பதற்கு காரணமில்லை

## சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கப்பட்ட போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிகார பரவலாக்கலையும் ஜே.வி.பி. அதிகார பன்முகப்படுத்தலையும் முதன்மைப்படுத்தியிருந்தன.

இந்த நிலையில் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பானது ஆகக் குறைந்த மட்டத்தில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துதல் என்ற விடயங்களையே உள்ளடக்கியுள்ளது எனில் அதனை ஜே.வி.பி. எதிர்ப்பதற்கான காரணம் எதுவும் தெரியவில்லை என சனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. சொல்லாலும் செயலாலும் வன்முறைகளை கைவிட்டதா? என சனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆழிப்பேரலை நிவாரணம் தொடர்பான கட்டமைப்பில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடாது என ஜே.வி.பி. வலியுறுத்தி வருகின்றது.

இந்த நிலையில், ஜே.வி.பி. அரசியலுக்கு வருவதற்கு முன்னர் தமது பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிட்டதாகப் பகிரங்கதமாக அறிவித்ததா? என அவர் கேள்வி எழுப்பினார். அவ்வாறான ஒரு இயக்கத்தின் உறுப்பினர்கள் இன்று அரசாங்கத்தின் அமைச்சர்களாக இணைந்து செயற்படுகின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் முதல் முறையாக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் நிலைப்பாட்டை ஜே.வி.பி. எதிர்ப்பதானது யதார்த்தமற்றது என சனாதிபதி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளைக் காட்டிலும் வடக்கு கிழக்கின் ஏனைய பகுதிகளில் ஆழிப்பேரலையின் தாக்கம் பாரியதாக இருந்தன. இருந்த போதும் வடக்கு-கிழக்கிற்கான பொதுக்கட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளைத் தவிர்த்து செயற்படமுடியாது. தமது கட்டுப்பாட்டுப்பகுதியில் மட்டுமல்லாமல் ஏனைய வடக்கு-கிழக்கு பகுதியிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பலப்பிரயோகம் இருப்பதே இதற்கு காரணமாகும். உதாரணமாக பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளும் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்டன.

எனினும் அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளைத் தவிர்த்த நிலையில் பொதுக்கட்டமைப்பு ஒன்று செயற்படுத்தப்பட்டு அதனை அங்குள்ள மக்கள் நிராகரிப்பார்களாக இருந்தால் அமைக்கப்படும் பொதுக்கட்டமைப்பில் எவ்வித பயனும் இருக்காது என சனாதிபதி சுட்டிக்காட்டினார்.

# தென்னிலங்கை அரசியல்வாதிகளால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது!

## —கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கை அரசியல் வாதிகளால் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று சிறிலங்காவின் 44 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சனாதிபதி செயலகம் நடத்திய கருத்துக்கணிப்பிலேயே இந்த முடிவு வெளியாகியுள்ளது. தொலைபேசி வழியாக இரு நாட்கள் இந்த கருத்துக் கணிப்பை சனாதிபதி செயலகம் நடத்தியுள்ளது.

இதில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக 61.9 சதவீதம் பேரும் ஆதரவாக 21.93 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர். 16.98 சதவீதம் பேர் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. அதேபோல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று 34 வீதம் பேரும், அவரால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று 31.6 வீதம் பேரும் கருத்துக் கூறியுள்ளனர். தென்னிலங்கை அரசியல்வாதிகளால் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று 44 சதவீதம் பேர் கூறியுள்ளனர்.

# கல்வியங்காட்டில் கடை தீப்பிடித்தது; 50 லட்ச ரூபா பொருட்கள் நாசம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் பாரிய தீவிபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதில் கல்வியங்காட்டுச் சந்தியிலுள்ள செங்குந்தா பொதுச் சந்தைக் கட்டடத்துக்கு எதிரிலுள்ள பலசரக்குக்கடை ஒன்று தீயில் எரிந்து நாசமாகியது.

இவ்விபத்தினால் இக்கடையில் இருந்த சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான பலசரக்குப் பொருட்களும், அங்கிருந்த தளபாடங்கள், எரிவாயு சிலிண்டர்கள் என்பன தீயில் எரிந்து நாசமாகியிருப்பதாக கோப்பாய் பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இவ்விபத்து கடை மின் சுற்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் நிகழ்ந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# புலிகளின் வான்படையை சமாளிக்க சிறிலங்கா வான்படை தயாராக உள்ளதாம்

## வான்படைத் தளபதி கூறுகிறார்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான்படை அச்சுறுத்தலைச் சமாளிக்கும் வகையில் சிறிலங்கா வான்படை தயாராக இருப்பதாகவும், வான்தாக்குதல் ஒன்றை நடத்தினால் விடுதலைப்புலிகளின் வானூர்தி ஓடு தளத்தையும் வானூர்திகளையும் அழித்து விடும் ஆற்றல் சிறிலங்கா வான்படைக்கு இருக்கிறதெனவும் வான்படைத் தளபதி எயார் மார்ஷல் டொலானட் பெரேரா தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போதைய நடைமுறையில் உள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் காரணமாக அதனை மேற்கொள்ள முடியாதிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் வான் பரப்பை கண்காணிக்கும் கருவிகளை பொருதுவதற்கு தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அதற்கு வெளி நாடுகளின் உதவிகளைக் கோரியுள்ளதாகவும்,எயார் மார்ஷல் டொலானட் பெரேரா தெரிவித்துள்ளார்.

தியத்தலாவை இராணுவ முகாமில் அண்மையில் நடைபெற்ற படைதுறை அதிகாரிகளின் நிகழ்வு ஒன்றின் போதே வான் படைத் தளபதி இந்தக்கருத்துக்களை தெரிவித்தார்.

### சமாதான சந்திப்பு

(திருகோணமலை)

போருக்கு எதிரான சமாதான முன்னணியினர் திருகோணமலையில் எழுந்துள்ள புத்தர்சிலை தொடர்பான சர்ச்சை குறித்து சமாதான சந்திப்பு ஒன்றினை நேற்று மதியம் நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் ,திருகோணமலை தமிழ்மக்கள் பேரவையினரும், சர்வமத பிரமுகர்களும், வடகிழக்கு சிங்கள அமைப்பினரும், முச்சக்கரவண்டி சங்கத்தினரும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை எகட் அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (32)

# சந்திரிகாவை தினேஷ் குணவர்த்தன சந்தித்து கலந்துரையாடல்

மகாஜன எக்சத் பெரமுனையின் தலைவரும், நகர அபிவிருத்தி அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன சனாதிபதியைச் சந்தித்து பல விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகத் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசு கைச்சாத்திடவுள்ள உத்தேச பொதுக்கட்டமைப்புக் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கு மாகாணங்களில் தேர்தல்கள் கூடிய விரைவில் நடத்த வேண்டியதன் அவசியத்தைத் தான் சனாதிபதிக்கு வலியுறுத்தியதாக தெரிவித்தார்.

தேர்தலில் பங்கு கொள்வதன் மூலம் அந்தப் பிரதேச மக்களுக்கு நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மேலதிக பங்களிப்பை செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

மகாஜன எக்சத் பெரமுனை, எந்தக் காரணம் கொண்டும் அரசாங்கத்தைவிட்டு விலகவோ அல்லது அதற்கு தர்ம சங்கடமான நிலையை ஏற்படுத்தப்போவதில்லை எனவும் தினேஷ் குணவர்த்தன சனாதிபதிக்கு உறுதி வழங்கியுள்ளார். (32)

### திருமலை....

மேற்கொள்வதில் காணப்படும் சிரமங்கள் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றை நிவர்த்திக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

முஸ்லிம் பிரதிநிதிகளுடனான இக்கலந்துரையாடல் ஆக்கபூர்வமானதாக அமைந்தது என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார். காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு பிற்பகல் ஒரு மணி வரை நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (25)

### நெருக்கடிகள்...

தாகவும் அதனைத் தான் ஏற்படுத்துவேன் எனவும் கூறினார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு பொதுக்கட்டமைப்பைப் பாதுகாப்பதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தேவைப்படுமாக இருந்தால் அது ஒரு பிரச்சினையாக இருக்குமென தாம் கருதவில்லையெனவும், பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம், அவ்விதமாகப் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு அது முறையாக இயங்கிவந்தால் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கு தாம் பின்நிற்கமாட்டோம் என சனாதிபதியிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று மதியம் 11.00 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பின் போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைவர் இரா.சம்பந்தனின் தலைமையிலான குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் மாவை சேனாதிராஜா ஆகியோர் பங்கு கொண்டனர்.

இதேவேளை, திருகோணமலையில் அத்துமீறி அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றுவதற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டாமென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் புத்தர் சிலை விவகாரத்தையும் பொதுக்கட்டமைப்பு விடயத்தையும் தெற்கில் உள்ளவர்கள் ஒன்றாக்கி தமக்கு நெருக்கடிகள் தர முயல்வார்கள். அதன் மூலம் பொதுக்கட்டமைப்பு அமைப்பதில் தடங்கல்கள் ஏற்படும். எனவே புத்தர்சிலை விவகாரத்தில் பொறுமை காக்கும்படி சந்திரிகா கூட்டமைப்பினிடம் வேண்டுகோள் விடுத்தார். இவ்விடயத்தில் தான் உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும் சந்திரிகா கூட்டமைப்பினரிடம் தெரிவித்த

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இடம்பெறுவதை தாம் பெரிதும் விரும்புவதாகவும சந்திரிகா இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார். ஆனால் இவ்விரு விடயங்கள் தொடர்பாக தாம் ஆலோசனைகள் நடாத்திவிட்டு பின்னர் முடிவு தெரிவிப்பதாக சந்திரிகாவிடம் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

### கருணாவின்....

ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்துள்ளனர். இம் மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

### பொதுக்கட்டமைப்புக்கு...

இதனை யார் செய்தாலும் அதனை ஜே.வி.பி தடுத்து நிறுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். சனாதிபதி ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்பு தொடர்பில் பகிரங்க அறிவித்தல் ஒன்றை மறுப்பாராக இருந்தால் தமது கட்சி எதிரணியில் அமர்வது உறுதியானது என்றும் அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு போர் நிறுத்த உடன்படிக்கை மூலம் வடக்கைக் கொடுத்து விட்டதாக தெரிவித்த அவர் சனாதிபதி ஆழிப் பேரலை உடன்படிக்கை மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கிழக்கை கொடுக்கத் துணிந்து விட்டதாகவும் வீரக்குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியமைக்க தாம் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (32)


# சாவு அறிவித்தல்



## கந்தையா-குகதாஸ்

மாரிசம்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குகதாஸ் மாஸ்ரர் என்றழைக்கப்படும் கந்தையா-குகதாஸ் 10.06.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற கந்தையா-மதியாபரணம் தம்பதிகளின் அன்பு மகனும், பவானியின் அன்புக் கணவரும், சகானா, மோஷிகீரன், ரஷீதரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னார் கொக்குளாய் மகாவித்தியாலய ஆசிரியராகவும், இளவாலை கென்றி அரசர் கல்லூரியின் ஆசிரியராகவும் கடமையாற்றியவராவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.06.2005 செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் அளவெட்டி வடக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்
ரகு மாஸ்டர்

(6263)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது